# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 12 ஞாயிற்றுக்கிழமை [29-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:236


## ஹர்த்தாலினால் வவுனியா ஸ்தம்பிதம்

வவுனியா, ஒக. 29

பொதுமக்கள் மீது அதிரடிப்படையினர் நடத்திவரும் தாக்குதல்களைக் கண்டித்து நேற்று வவுனியாவில் புளொட் அமைப்பு நடத்திய ஹர்த்தாலினால் நகரம் முழுவதும் ஸ்தம்பிதம் அடைந்தது.

வவுனியா நகரில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்களுக்கு ஊழியர்கள் சமுகமளிக்காமையினால் பெரும்பாலான அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

நகரப் பகுதி மக்கள்; நடமாட்டம் எதுவுமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

கடந்த 6 ஆம் திகதி வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து அதிரடிப் படையினரால் இரு பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையும் —

18 ஆம் திகதி மேற்படி படையினரால் பொதுமகன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதையும் —

25 ஆம் திகதி வேப்பங்குளத்தில் அதிரடிப் படையினரால் இரண்டு வயதுக் குழந்தை ஒன்று சுட்டுக் கொல்லப்பட்டதுடன், இரு சிறுவர் காயமடைந்ததையும் —

(11 ஆம் பக்கம் பார்க்க)

## மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர் 8 பேர் கைது

கொழும்பு, ஒக. 29

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் எட்டுத் தமிழ் மாணவர்கள் கொழும்பு மீரிகானப் பகுதியில் வைத்து நேற்றுப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்,

நேற்றுக்காலை இப்பகுதியிலுள்ள மாணவர்களின் இருப்பிடத்தைச் சுற்றிவளைத்த பொலீஸார் மேற்படி மாணவர்களை கைது செய்தனர்.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கொடுத்த தகவலையடுத்தே இந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## லங்காமுடித்த இன்று காங்கேசன்துறைவரும்

திருகோணமலை, ஒக 29

திருகோணமலை துறைமுகத்திலிருந்து நேற்றுமாலை காங்கேசன்துறைநோக்கி புறப்பட்ட லங்கா முடித்த கப்பலில் வவுனியாவில் இருந்த 500 அகதிகளும் வெலிக்கடை, களுத்துறை சிறைகளிலிருந்த 8 பேரும் பயணம் செய்கின்றனர்.

ஆயிரத்து 250 பயணிகளுடன் புறப்பட்டுள்ள இந்தக் கப்பல் இன்று மாலை காங்கேசன்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

லங்கா முடித்த கப்பலில் குடாநாட்டுக்கான 125 தபால் பொதிகளும் எடுத்துவரப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

## கூரை மீது ஏறி இருந்து
# யாழ். சிறைச்சாலையில் சிப்பாய்கள் போராட்டம்!

### 11 கோரிக்கைகளை முன்வைத்து

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 29

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள யாழ். மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த பத்துப் பேர் பதினொரு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று சிறைச்சாலைக் கூரை மீது ஏறி இருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 7.00 மணிக்கு இவர்களது போராட்டம் ஆரம்பமானது. ஏழு இராணுவத்தினரும் மூன்று கடற்படையினரும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை அடுத்து சிறைச்சாலைக்குச் சென்ற படை அதிகாரிகள் மற்றும் பொலீஸார் கேட்டுக்கொண்டதையடுத்து அவர்களில் இருவர் போராட்டத்தைக் கைவிட்டுக் கீழே இறங்கினர் என்றும்—

ஏனைய எட்டுப்பேரும் நேற்று இரவும் கூரை மீது அமர்ந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் சிறை அதிகாரிகளிடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் சில வருமாறு:-

★ நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதால் விரைவில் எமக்குப் பிணை அனுமதி வழங்க வேண்டும்.

★ அவ்வாறு இல்லாவிடில் வவுனியா நீதிமன்றில் ஆஜராகக் கூடிய வகையில் வேறு சிறைக்கு எங்களை மாற்றுங்கள்.

★ 5 முதல் 14 வரையான ஆண்டுகள் இராணுவத்திலும் கடற்படையிலும் நிரந்தர சேவையில் ஈடுபட்டுப் பணியாற்றி உள்ள எமது நிலை குறித்து இராணுவமோ அல்லது அரசாங்கமோ விரைவான தீர்வு ஒன்றை பெற்றுத் தர வேண்டும்.

★ எமது வழக்குத் திகதிகளில் எம்மை நீதிமன்றுக்கு அழைத்துச்செல்லாது வழக்கு ஆவணங்களை மட்டும் நீதிமன்றுக்கு எடுத்துச் சென்று வழக்குக்கான அடுத்த திகதியை தெரிந்து கொண்டு வருகின்றார்கள். இதனால் நாம் எமது சட்டத்தரணிகளைச் சந்திக்கமுடியாதுள்ளது. சட்டத்தரணிகளைச் சந்திக்க எமக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

★ எமது வழக்குகள் குறித்து சட்டத்தரணிகளுடன் கலந்துரையாட மொழி தடையாக உள்ளது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்.

★ எமது இன்னல்கள் குறித்து நீதிபதிகளுக்கு முறையீடு செய்ய சிறை அத்தியட்சகர் வாய்ப்பு வழங்கவேண்

[11 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டுநகர் சுற்றிவளைப்பு!

மட்டக்களப்பு, ஒக. 29

மட்டக்களப்பு பஜார் வீதி நேற்று பகல் பொலீஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு அறுநூறுக்கும் அதிகமானோரின் தேசிய அடையாள அட்டைகள் பெறப்பட்டு அவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்று பகல் 11 45 மணியளவில் இந்த வீதி சுற்றிவளைக்கப்பட்டு வர்த்தக நிலையங்களில் வேலை செய்தோர் மற்றும் பொருள்களை கொள்வனவு செய்யவந்தோர் ஆகியோரின் அடையாள அட்டைகள் பொலீஸாரினால் எடுத்துச் செல்லப்பட்டன.

அடையாள அட்டைகளை எடுத்துச் சென்ற பொலீஸார் எல்லோரையும் மட்டக்களப்பு காந்தி சதுக்கத்துக்கு செல்லுமாறு கேட்டனர்.

காந்தி சதுக்கத்தில் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அடையாள அட்டைகள் மீண்டும் வழங்கப்பட்டு அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுப்பகல் 11.45 மணிமுதல் நண்பகல் ஒரு மணிவரை இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

(இ-5)

## சந்திப்பு

கொழும்பு, ஒக. 29

வீரவிதான அமைப்பின் நடவடிக்கைகள் குறித்து தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் கண்டியிலுள்ள அஸ்கிரிய பீடாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

அமைச்சர் அலவி மௌலானா தலைமையில் செல்லும் தமிழ்— முஸ்லிம் பிரதிநிதிகளே இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வீரவிதான அமைப்பு தெற்கில் தமிழர்களுக்கு எதிரான தவறான பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதையடுத்தே இந்தச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

[இ-5]



அப்ப களுத்துறைப்போராட்டத்தை காப்பி அடிச்சிருக்கினம் போல...

### உதயன் மீதான தாக்குதல்:
## கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு வணிகர் கழகம் ஆதரவு!

யாழ்ப்பாணம், ஒக. 29

உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை கண்டித்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் பகல் 12 மணியுடன் சகல வர்த்தக நிலையங்களையும் அரைக் கதவில் மூடும்படியும்— வர்த்தக உரிமையாளர்களையும் வர்த்தக ஊழியர்களையும் இந்தஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் — வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது கடந்த 21 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலையும் வணிகர் கழகம் வன்மையாக கண்டித்துள்ளது.

(இ-5)

## போரை நிறுத்தக் கோரி கொழும்பில்
# பாதயாத்திரையும் பிரார்த்தனையும்

போர் நிறுத்தப்பட்டு நாட்டில் சமாதானத்துக்கான புதிய பாதை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் எனக்கோரி இன்று கொழும்பில் சர்வோதயம் அமைப்பின் தலைவர் ஏ. ரி. ஆரியரத்னாவின் ஏற்பாட்டில் பாதயாத்திரையும் மதப்பிரார்த்தனைகளும் இடம்பெற உள்ளன.

இன்று காலை 11.00 மணியளவில் கொழும்பு லிபேர்ட்டி வீதி, மருதானைச்சந்தி, றீட் அவெனியு, ஹோட்டன் பிளேஸ் ஆகிய பகுதிகளில் இருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நிறைவடையும். அங்கு மதப் பிரார்த்தனைகளும் பொதுக் கூட்டமும் இடம் பெறும்.

இந்தப் பாதயாத்திரையில் சர்வோதயத்தைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் தொண்டர்களும், அமைச்சர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், பிக்குமார்கள் ஏனைய சமயத் தலைவர்கள், அரசசார்பற்ற பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர்.

(இ-6)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOGIC - II (A/L - 2000)

ஆரம்பம் 30 — 08 — 99 மாலை 5. 00 மணி

விரிவுரையாளர்

எஸ். எஸ். மனோகரன்

FURTHER EDUCATION

(உடுவில் மகளிர் கல்லூரி) (68567)

## வேலை வாய்ப்பு வெற்றிடங்கள்

திட்டமிடல் முகாமையாளர், திட்டமிடல் பொறியியலாளர், பராமரிப்பு பொறியியலாளர், இயந்திரம் திருத்துநர்கள், கணிய அளவையியலாளர், தொழில் நுட்ப தேசிய டிப்ளோமா (சிவில்) பயிற்சி பெற்றவர்கள், கொம்பிறெசர் இயக்குநர்கள். வெடிவைக்கும் இயந்திர இயக்குநர்கள் தேவை.

விண்ணப்பிக்கவும்.

இல. 934, மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8684)

## SPECIAL ENGLISH

விசேட ஆங்கிலமொழிப் போதனை

காலை மாலை

வார இறுதி வகுப்புகள்

(காலை 10-30 — 12-30) (மாலை 2-30 — 4-30)

ஆரம்பம்: 4 - 9 - 99 பி. ப. 2-30 மணி

ஆசிரியர்: த. ந பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்களுக்கு:

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(68558)

## தொழிற் பயிற்சி

வட்டுக்கோட்டை

**தென்னிந்திய திருச்சபை**

பெண்கள் ஐக்கியத்தினால்

நடத்தப்படும் தொழிற்பயிற்சி

செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

விண்ணப்பப்படிவத்தை குரு இல்லத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

கற்பிக்கப்படும் பயிற்சிகள்

1. தையல்
2. கம்பளி நூல் வேலை
3. சமையல் கலை
4. கேக் ஐசிங்
5. பூவேலை
6. தும்பு வேலை
7. துணியில் நிறந்தீட்டல்
8. பன்ன வேலை

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

சகோ. து. யோசுவா,
குரு இல்லம்,
வட்டுக்கோட்டை.

(68563) — தலைவி

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

சகல வர்த்தகர்களுக்குமான

# அன்பான வேண்டுகோள்

உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது 21-8-99 இரவு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை

எமது கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்தச் செயலைக் கண்டித்து

31-8-99 செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணிக்கு

ஒரு கண்டன ஆர்ப்பாட்டத்தை

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்

நடத்தத் தீர்மானித்துள்ளது. இந்தத் தினத்தில் சகல வர்த்தக உரிமையாளர்களும் தங்களின் வர்த்தக ஸ்தாபனங்களைப் பகல் 12.00 மணியுடன் அரைக் கதவில் பூட்டி வர்த்தக உரிமையாளர்களும், வர்த்தக சிப்பந்திகளும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**

இல 27 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/8695)

## மருத்துவபீடத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாண மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர்கள், வைத்தியர்கள், மருத்துவபீட நலன் விரும்பிகளுடனான கலந்துரையாடல் நாளை திங்கள்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவக் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு போன்றவற்றில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி தீவிரமாக ஆராயவேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்டவர்களை இந்தக் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-5)

## புதிய பிரிவு - I

ENGLISH SPOKEN AND GRAMMAR

By: BRITTO

ஆரம்பம்: 01-09-1999

நேரம்: காலை 9.00 மணி (திங்கள், புதன், வெள்ளி)

இடம்: கொக்குவில் (ஞானபண்டிதருக்கு அருகில்)

(சி/8692)

## புலமைப்பரிசில் 2000

2 ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளி பெற்றோர்

வி. யசோதா — யா/ இ. ஆ. பா.
ஜெ கிருத்திகா — யா/ இ. ஆ. பா.
வா. சுகன்யா — யா/திருநெல்வேலி த. க. பா.
கே. கௌசிகா — யா/ஆனைப்பந்தி மெ. மி. பா.

அடுத்த பரீட்சை இன்று

BOND யாழ்நகர்,

(68522)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

அஜித், தேவயானி, பார்த்தீபன் நடித்த

நீ வருவாய் என

(புதிய வெளியீடு)

காட்சிகள்: 10-30, 2-30

(68360)

## ராஜா

யாழ்ப்பாணம்

பிரசாந்த் — ஐஸ்வர்யா மற்றும் பலர் நடித்த

**ஜீன்ஸ்**

10-30, 1-45, 5-00.

(புதிய நேரம்)

(இ/8562)

## நாகம்ஸ்

சுன்னாகம்

இளைய தளபதி விஜய் தேவயானி, ரம்பா நடித்த

**நினைத்தேன் வந்தாய்**

காட்சிகள் 11.00, 2.30

(புதிய நேரம்)

(68563)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா இரத்தினசிங்கம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவி செல்லம்மா 27-08-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயஶ்ரீ, சத்தியஶ்ரீ (கனடா), ஜெயஶ்ரீ (கனடா), சாந்தஶ்ரீ (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), பத்மஶ்ரீ (சுவிஸ்), ராஜஶ்ரீ ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சரஸ்வதி, Dr. கந்தசாமி, தருமலிங்கம், கமலாதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-08-99) கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
Dr. S. கந்தசாமி (சகோதரர்)
75 A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி R. சிறீதரன்,
391/5, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு — 6,

(68559)

## டோமினிக் மேரி யோசப்பின்

18/A கோவில் வீதியை பிறப்பிடமாகவும் தற்போது வட்டக்கச்சியில் வசித்தவருமாகிய மேரி யோசப்பின் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுளியாம்பிள்ளை அம்புறோஸ் டோமினிக் (யாழ். ஆசனக் கோயில் முன்னாள் சங்கிஸ்தாம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான D. J. மரியநாயகம், D. R. பிரான்சிஸ், றோஸ், பேழி மற்றும் திருமதி. மெற்றில்டா பிரான்சீஸ், (Canada), மதுரம் (வட்டக்கச்சி), D. A. ஜெயரட்ணம் (முன்னாள் Kabil Winding WorKs, யூபிலி பஜார், தற்போது ரட்ணம் அழகுசோலை (New Market), D. V. இராசரத்தினம் (Leyden Tea Stores-தற்போது வட்டக்கச்சி) ஆகியோரினது அன்புத் தாயாரும் காலஞ்சென்ற S. P. பிரான்சீஸ், திரு. அன்ரன் யோசப் (சித்திர ஆசிரியர் வட்டக்கச்சி), பிரான்சிக்கா, புனிதம், யூலி ஆகியோரினது அன்பு மாமியாரும், ராஜன், நிலானி, குமார், கலிஸ்ரஸ், றனிற்றா, லெனிற்றா, கலிஸ்ரா, டெனிஸ், வசீகரன், கபிலன், கமில்ரன், தர்மிலா, கிங்ஸ்ரன், கிறிஷான், கிறிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28-08-99 (சனிக்கிழமை) வட்டக்கச்சியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
D. A. ஜெயரட்ணம் (மகன்)
70/1, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(68571)

## நடராசா திசைவீரசிங்கம்

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை, வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா திசைவீரசிங்கம் 26-8-99 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நடராசா மற்றும் தெய்வானைப்பிள்ளை (சிங்கப்பூர்) தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் இரத்தினம் தம்பதிகளின் மருமகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் ரஜினாவின் (விஞ்ஞானபிரிவு 2000, யாழ். இந்து மகளிர் கல்லூரி) அருமைத்தந்தையும் கமலாதேவி (லண்டன்), ஜெயவீரசிங்கம் (லண்டன்), தவமணிதேவி (சிங்கப்பூர்), சரஸ்வதிதேவி (கொழும்பு), சந்திரலேகா (திருநெல்வேலி), செல்வராணி (சிங்கப்பூர்) ஆகியோரின் சகோதரனும், இரத்தினேஸ்வரி, ரவீந்திரன் (ஜேர்மனி), ஜெயஶ்ரீ, விமலாதேவி, ஶ்ரீபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தி. சத்தியபாமா (மனைவி)
இராச வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

(68523)

## கணபதி மார்க்கண்டு

நவாலியைப்பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கு கலைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி மார்க்கண்டு (இளைப்பாறிய இ. போ. ச. சாரதி, காரைநகர் சாலை) நேற்று 28—08—99 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மரியம்மாவின் அன்புக் கணவரும், சுகாஜினி (டென்மார்க்), சுகந்தினி (ஜேர்மனி), சுதாரணி (ஜேர்மனி), சுதர்சினி (வெளிவாரி பட்டதாரி பேராதனை), சுராகினி (யாழ். பல்கலைக்கழகம் 3 ஆம் வருட கலைப்பீடம்), சுமதி (மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியம் (டென்மார்க்), அமரசிங்கம் (ஜேர்மனி), சௌந்தரராசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரஷ்மி, இந்துஷன், நிகில்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29-08-99 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 11. 30 மணியளவில் நடைபெற்று அளவெட்டி மேற்கு கொட்டுப்பனை மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சிவசுப்பிரமணியம் (மருமகன்)
அளவெட்டி தெற்கு,
கலைநகர்.

(68570)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்

மத்தியூஸ் வீதிக்கு அருகிலுள்ள குளம் நிர்மாண வேலைக்கு கேள்வி ஒப்பந்தம் கோரப்படுகின்றது.

குளஅகழ்வு வேலைகளில் அனுபவம் வாய்ந்த, பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் சேரவேண்டிய கடைசி நாள்: 2-9-1999

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

இயக்குநர்,
**மனித முன்னேற்ற நடுநிலையம்,**
மத்தியூஸ் வீதி,
தியோகு பாதை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 021 -2571

(68554) – நிர்வாகம்.

---

## புதிய தொழில் நுட்பத்துடன் இணைந்த நண்ணிய கொங்கிறீற் கூரைத் தகடுகள்

கட்டடக் கலைஞர்களே, இல்லத்தரசிகளே!

கலைவடிவங்களை உள்ளடக்கிய நிர்மாண வேலை செய்வதற்கும் இல்லங்களை இளமை குலையாமல் நீண்ட காலத் தோற்றமளிப்பதற்கும் குறைந்த செலவில் நிறைந்த உறுதியுடன் தட்ப, வெட்பநிலைக்கேற்ப அனுபவமிக்க பிரிட்டிஷ் நாட்டின் நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட கூரைத் தகடுகள், எதிரொலியைத் தடுக்கும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீற் கற்கள் போன்றவற்றை மலிவாகவும் தாராளமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| கூரைத்தகடுகள் | – 2' / 2' |
| கொங்கிறீற் கற்கள் 1 | – நீளம் 12'' |
| கொங்கிறீற் கற்கள் 2 | – நீளம் 16'' |

இடம்:
**மனித முன்னேற்ற நடுநிலையம்**
இல. 14, மத்தியூஸ் வீதி,
தியோகு பாதை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் 021 – 2571

(68553)

---

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

### 'தமிழ் விழா - 99'

இன்று 29-08-1999 ஞாயிற்றுக்கிழமை

காலை நிகழ்ச்சிகள்;

நேரம்: 9.30 – 1.00 மணி
இடம்: கலைத்தூது மணிமண்டபம் (திருமறைக் கலாமன்றம்)
தலைமை: திரு. க. ராஜகோபால் (செம்பியன் செல்வன்)

கருத்துரைகள்:
✿ செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை ''ஈழத்து அண்மைக்கால மரபுவழிப் பிரபந்தங்களில் சமுதாயம்''
✿ அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் ''உலக மயமாக்கல்''

மாலை நிகழ்ச்சிகள்:

நேரம்: மாலை 5.30 மணி
இடம்: மன்ற அரங்கு
தலைமை: திரு. எம். விக்ரர் ஜெயம்
சிறப்புரை: திரு. கோ. சி. வேலாயுதம் ''இனிமைத் தமிழ்மொழி எமது''

கவியரங்கு: பொருள்: என்று தணியும்...
1. செல்வி தாட்சாயணி 3. திரு. எம். சாம் பிரதீபன்
2. திரு. ச. முகுந்தன் 4. திரு. காரை எம். பி. அருளானந்தம்

திருமறைக் கலாமன்றம் வழங்கும்
நாடகம்: ''சிங்க குலச்செங்கோல்'' (நாட்டுக் கூத்து)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி.

தமிழ் விழா சிறக்க வாழ்த்துகிறோம்:
**திரு.எஸ். குணசீலன்–திரு.எஸ். சிறீகாந்தன் ரெலிக்கொம் ஊழியர்கள்.**

[சி/ 8681]

---

## விற்பனை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

பனை அபிவிருத்திச் சபையின் மதுபான மொத்த விற்பனை நிலையம் ஒன்று கடந்த வாரம் தெகிவளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கானை மற்றும் திக்கத்தில் உள்ள மதுபான வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட, அண்மையில் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒருதொகுதி பனஞ்சாராயத்தை விற்பனை செய்யும் பொருட்டே மேற்படி மொத்தவிற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் குடாநாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும் பனஞ்சாராயம் இந்த விற்பனை நிலையம் மூலம் விற்பனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் எம். பாக்கியநாதன், தென்னை அபிவிருத்திச்சபையின் தலைவர் உபாலி செனவிரட்ன மற்றும் பனை அபிவிருத்திச்சபையின் பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் ஆகியோர் இந்த விற்பனை நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். (ஐ-7)

## அதிபர் வெற்றிடங்கள்

வலிகாமம் தெற்கு, ஓக. 29

வலிகாமம் கல்வி வலயத்தில் தொல்புரம் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வட்டுக்கோட்டை மேற்கு அமெரிக்கமிஷன்பாடசாலை, என்பனவற்றில் அதிபர்கள் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வலிகாமம் கல்வி வலயம் கோரி உள்ளது.

செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## இலவச மருத்துவ பரிசோதனை

வலிகாமம் தெற்கு, ஓக. 29

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை (29-8-99) காலை மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் இலவச கண் பார்வை, பொது மருத்துவ பரிசோதனைகள் நடைபெற உள்ளன.

இரத்த அழுத்தம், நீரிழிவு, ஏனைய பொது மருத்துவப் பரிசோதனைகளும் இதன் போது இடம்பெறும்.

வசதி குறைந்தவர்களுக்குத் தேவைப்படும் மூக்குக் கண்ணாடிகளை லயன்ஸ் கழகம் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும்.

மேற்படி பரிசோதனைகளுக்கான ஏற்பாடுகளைச் செயற்றிட்டத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராசா செய்துள்ளார்.

(ஐ-152)

## சவர்க்காரம் அன்பளிப்பு

திருநெல்வேலி, ஓக. 29

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சுகாதாரப் பிரிவு யாழ். சுகாதார திணைக்களத்திடம் ஐயாயிரம் ''லைவ்போய்'' சவர்க்காரக் கட்டிகளையும். ஒரு தொகை கிருமிநாசனி திரவத்தையும் கடந்தவாரம் வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகங்களுக்கும் இவை பங்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-135)

---

## உதைபந்தாட்டப் போட்டிகள்

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற உள்ளன.

16 வயது, 18 வயதுப் பிரிவுகளைக் கொண்ட அணிகள் பங்குபற்றும் சகல உதைபந்தாட்டப் போட்டிகளும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இரு பிரிவு அணிகளிலும் தலா ஏழு பாடசாலைகள் இம்முறை பங்குபற்றுகின்றன.

இறுதி நிலைப் போட்டிகள் செப்ரெம்பர் 18 ஆம் திகதியும், 21 ஆம் திகதியும் நடைபெறும்.

போட்டிஇணைப்பாளராக கே. கனகசபாபதி செயற்படுவார். [ஐ-152]

---

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு ஆண்களுக்குரிய ஆடைகளைத்தைப்பதில் நன்கு தேர்ச்சி உள்ளவர்கள் தேவை. மற்றும் புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக உள்ளவர்களும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**சிற்றி ரெக்ஸ்&ரெயிலர்ஸ்**
73, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8677) தொலைபேசி: 2671

---

## தேங்காய் கூறுவிலை

**ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை**
இத்தாவில் – பளை

மேற்படி தேங்காய்களின் கூறுவிலைக்கான விண்ணப்பங்கள் மாதாந்தம் முதலாம் திகதி காலை 11 மணிமுதல் பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். முதலாம் திகதி சனி, ஞாயிறு, பொது விடுமுறை தினமாகவிருந்தால் அடுத்துவரும் வேலைநாளில் உரிய நேரத்திற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் ரூபா 500 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சு. தவரத்தினசிங்கம்
பொறுப்பதிகாரி

(சி/8678)

---

## மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

### சீட்டிழுப்பு முடிவுகள்

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் நலிவுற்றோர் சேவைதிட்ட நிதிக்காக 26-08-99 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்.

| | |
|---|---|
| 1ஆம் பரிசு இல. | 0223 |
| 2ஆம் பரிசு இல | 1332 |
| 3ஆம் பரிசு இல. | 2016 |

ஆறுதல் பரிசுகள்:
1798 2107 0683 0033 2054

பரிசுக்குரியவர்கள் கழகச் செயலகத்தில் 14 நாள்களுக்குள் கிழமை நாள்களில் பி. ப. 4-00 மணி – பி. ப. 5-30 மணி வரை தங்கள் ரிக்கற்றுக்களை சமர்ப்பித்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

லயன் V. இராதாகிருஷ்ணன், செயல்திட்ட தலைவர்
லயன் R. சிவயோகன், லயன்ஸ் கழக தலைவர்

(68556)

---

## கண்ணீர்க் காணிக்கை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 8A யில் கல்வி கற்கும் எமது சக மாணவன்
**கனகசபை இளங்கோவேள்**
அவர்களின் அன்புச் சகோதரி

### திருமகள் கனகசபை

அவர்கள் 25 – 08 – 99 அன்று அகாலமரணமானதையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கு கின்றோம். அவரது மறைவால் ஆழ்ந்த துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தரம் 8A, சக மாணவர்கள்.

[68557]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Chundikuli Girls' College
**Dr. Thillayampalam**
**Vocational Training Institute**

### மனைப்பொருளியல் கற்கைநெறி

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 01-09-1999**

★ நவீன முறையில் உடை தயாரித்தல்
★ உணவு தயாரித்தல்
★ பூவேலை, அலங்காரம் ★ கைப்பணி
★ தலை அலங்காரம் ★ துணி பெயின்ரிங்

ஆகியன பயிற்றுவிக்கப்படும்.

மேற்படி கற்கைநெறியைப் பயில்வோருக்கு, இலவசமாக (Spoken English) வகுப்புகள் நடைபெறும். மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

அதிபர்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/8590)

## மருத்துவ முகாம்

மானிப்பாய் லயன்ஸ் வட்டக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் சோதி வேம்படி வித்தியா சாலையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெறும். (3-90)

## புலமைப் பரிசில் '2000'

SAT., SUN 9-00 a. m
ஆரம்பம்: 5 - 9 - 99
**I. B. S.**
சுண்டுக்குளி.
(68532)

## ST.JOHN'S COLLEGE
JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA
## ADMISSION - 2000

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. தரம்1, தரம் 6.
2. அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01—09—1999 முதல் 15—09—1999 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15—09—1999 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21—09—1999. அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி(போட்டோஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 250.
7. வயதெல்லைகள்:
   அ) தரம் ஒன்று : விண்ணப்பதாரி 1-2-1994க்கும் 31—01—1995 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் ஆறு ; விண்ணப்பதாரி 01—02—1989 இல் அல்லதுஅதற்குப்பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை :
   தரம் ஆறு வகுப்புக்கு 09-10-99 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாள்களில் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும்.

**விவரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.**

— அதிபர்கள்

(சி/8397)

## யாழ். மாவட்ட
## ஷெல்காஸ் சமையல் வாயு [SHELLGAS]
விநியோக உரிமைபெற்ற
## "மெக்ஸ்" நிறுவனத்தினரின்
## பணிவான அறிவித்தல்

போக்குவரத்து, கப்பல் கட்டண உயர்வினால் எம்மால் இதுவரை காலமும் 430 ரூபாவிற்கு விற்பனை செய்துவந்த (SHELL GAS) சமையல் வாயு எதிர்வரும் 01 – 09 – 1999 முதல் 530 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சிரமத்தைப் பாராது எங்கள் அன்பான வாடிக்கையாளர்களை அன்புடன் எம்முடன் ஒத்துழைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல்லத்தரசிகளுக்கு இனிப்பான செய்தி! இதமாகவும், சுகமாகவும் நேரத்தை வீணாக்காமல் இலகுமுறையில் சமையல் செய்யக்கூடிய சமையல் வாயு சிலிண்டர், பலவித தெரிவுகளைக் கொண்ட அடுப்புகள் மற்றும் உபகரணங்கள். யாவும் பெற்றுக்கொள்ள

யாழ். நகரில் ஒரே ஒரு ஸ்தாபனம்

## மெக்ஸ் நிறுவனம்

| தலைமையகம் | கிளை நிறுவனம் |
|---|---|
| "மெக்ஸ்" | "மெக்ஸ் புடைவை மாளிகை" |
| | (மொத்த, சில்லறை புடைவை வியாபாரிகள்) |
| இல. 70, பெரியகடை வீதி. | இல. 34, கஸ்தூரியார் வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| T.P. 2032 2852 | |

[68465]

KOBE KOBE KOBE KOBE KOBE

பணத்தை திருப்பி பெறும் உத்தரவாதம்

நம். 1
இலங்கையில் அதிகளவு விற்பனை

# KOBE
## UHF/VHF கலர் T.V பூஸ்டர்

- இலங்கை T.V சனல்களுக்கு ஏற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.
- வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தக்கூடிய 14 மாதிரிகள்
- விற்பனையின் பின்னர் சிறந்த விரைவான திருத்த சேவை

KOBE UHF அன்டனாக்கள் எல்லா UHF சனல்களுக்கும்
VHF அன்டனாக்கள் ரூபவாகினி, ITN சனல்களுக்கு

பூஸ்டர்கள் தெரிவு செய்ய 32 மொடல்கள்

சகல சனல்களிலும் பூரணத்துவமான படங்களுக்கு தனியான அன்டனாக்கள் பல பிரதேசங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நாடுகள் பூராவும் பெற்றுக்கொள்ளப்படும்

விசேடமாக UHF / VHF பூஸ்டர்கள்
2 UHF IN PUT 2 VHF INPUT
ONE OUTPUT

அன்டனா நிபுணர்கள்:
**LANKA NIPPON** ANTENNA PVT LTD.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 324726, 437735, Fax: 437736

Finally it is KOBE you will settle for ........!
must be KOBE ...... the Original
" நிப்போனின் " சகோதர நிறுவனம்

(சி/8582)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## முருகேசு கனகசபை
(ஆசிரியர்)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 26-10-1942 | 11-09-1995 |

திதி: 29 - 08 - 99

யார்க்கும் உரியவர் எங்கள் அப்பா
பார்க்குமெத் தொழிலிலும் முன்னோடி ஆனவர்
ஆண்டவன் அடியினிலமைதி கொண்டாரென்று
ஆறுதல் அடைந்து அனைவரும் என்றும்
தேறுதல் பெற்றுத் தெய்வம் தொழுவோம்.

மனைவி, பிள்ளைகள்.

கைதடி — நுணாவில்,
சாவகச்சேரி.

[68533]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இன்னும் பிந்தவில்லை

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் வருடத்திற்கு ஒருமுறை வரும் பெருவிழாவாக விளங்குவது நல்லூர்த் திருவிழாக் காலம்.

பல தசாப்தங்களாக நல்லூர்த் திருவிழா, அந்த ஆலயத்தின் சூழலில் மட்டுமன்றி குடாநாடு முழுவதிலுமே சைவ சமயிகளிடம் பக்தி அலையைத் தோற்றுவித்து வந்திருக்கிறது. சமய ஆசாரங்களும் அனுட்டானங்களும் குடாநாடு முழுவதிலும் தெய்வீக மணம் கமழச் செய்ததுண்டு. யாழ்ப்பாணச் சைவ மக்களின் கலாசாரம், பாரம்பரியங்களை சிறப்புற எடுத்துக் காட்டும் விழாவாகவும் நல்லூர் உற்சவ காலம் அமைந்தது உண்டு.

ஆனால் கால ஓட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆலயத்தின் புனிதத் தன்மையைக் காப்பாற்றுவதும், தெய்வீக உணர்வைப் பரப்பும் சமய விழாவாகப் பேணுவதும் சிரமமான காரியங்களாகி உள்ளன. நல்லூர்த் திருவிழாவைப் பக்தி பூர்வமாக அனுஷ்டிப்போரின் எண்ணிக்கை அல்லது விகிதாசாரம் குறைந்து, அதனை ஒரு கேளிக்கை விழாவாக அல்லது பொழுதுபோக்கு விழாவாகக் "கொண்டாட" விரும்புவோரின் விகிதாசாரம் அதிகரிக்கிறது.

குறிப்பாக, எமது இளைஞர்கள், யுவதிகளில் மிகப் பெரும்பாலானோர் சமயாசாரங்கள், அனுட்டானங்களைப் புறக்கணித்து அவற்றை மறந்தவர்களாக மாறிவிட்டனர் அதனாலேயே அவர்கள் ஆலயத்தையும் அதன் சூழலையும் திருவிழாக் காலத்தையும் கும்மாளமும், கலாட்டாவும் நிறைந்த இடங்களாகக் கருதிச் செயற்படுகிறார்கள்.

ஆலயம் புனிதம் பேணப்பட வேண்டிய ஸ்தலம். ஒழுக்கமும் சீலமும் ஆசாரமும் பக்தியும் நிறைந்திருக்க வேண்டிய இடம். ஆனால் இளைஞர்கள் அங்கு மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் விதத்திலும் ஒழுக்கத்துக்கும் அமைதிக்கும் பங்கம் உண்டாக்கும்வகையிலும் நடந்து கொள்கிறார்கள்.

அண்மைக் காலங்களில் ஆலயங்களில் இந்த தரப்பினரின் "நட்டா முட்டித்" தனங்களும் அசிங்கத்தனங்களும் அதிகரித்து வருகின்றன.

மக்கள் கூடும் இடங்களில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படக் கூடிய தக்க சூழ்நிலை இல்லாததைப் பயன்படுத்தி, ஆலயச் சூழலில் அடிபிடிகளும் நடைபெறுகின்றன. இவ்வாறாக எல்லாவகைகளிலும் திருவிழாக் காலத்தின் மகிமை தாழ்ந்தப்படுகிறது.

இவற்றால் பாதிக்கப்படுவோரும் சரி, சகிக்க முடியாதவர்களும் சரி நல்லூர்த் திருவிழாக் கால தாழ்வு நிலை குறித்து வருடாந்தம் மனம் வருந்துவதோடு அல்லது கண்டிப்பதோடு காலம் கழிகிறது.

இளைஞர்களின் இன்றைய போக்கை எவ்வாறு மாற்றலாம் என்று கருத்துப் பரிமாறி அவர்களுக்கு அறிவுரை வழங்கித் திருத்துவதற்கான ஏற்பாடுகள் தேவை. ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் அமைக்கப்படும் வியாபார நிலையங்களை இடம் மாற்றுவதால் உண்மையான பக்தர்களுக்குரிய தொல்லைகளைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு பல மாற்று வழிகளை — மாற்று நடைமுறைகளை — திட்டமிட்டு வகுத்துச் செயற்பட ஆலய நிர்வாகம், மாநகர சபை, தொண்டர் சேவையினர், சமய சமூக நலன் விரும்பிகள் ஆகியோரின் ஆலோசனைகளும் செயற்பாடுகளும் ஒன்றிணைய வேண்டும். அது இன்றைய அவசர தேவை. இப்போது கூடப் பிந்திவிடவில்லை.

# நயினை — நல்லூர் பாத யாத்திரை

திருநெல்வேலி, ஓக. 29

சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜம் நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில் இரதோற்சவத்தை முன்னிட்டு வழமைபோல இம்முறையும் நயினை – நல்லூர் பஜனை பாத யாத்திரையை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தொடர்ந்து 35 ஆவது வருடமாக இவ்வருடம் நடைபெறும் இந்தப் பஜனை பாத யாத்திரை அடுத்த மாதம் 5 ஆம் திகதி நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பூசை, பஜனை நிகழ்வுகளோடு ஆரம்பமாகும். மறுநாள் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும் பூசைக்குப் பின் வேல் எடுத்துக்கொண்டு குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, பண்ணை, கோட்டை, பெரியகடை, வில்லூன்றி, கந்தர்மடம் ஆகிய இடங்களுக்கு ஊடாக 8 ஆம் திகதி புதன்கிழமை காலை நல்லைக் கந்தன் ஆலயத்தை வேல்பவனி வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பஜனை பாதயாத்திரை செல்லும் இடங்களில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் அடியார்கள் தரித்து நின்று அமைதி, சமாதானம் வேண்டி பிரார்த்தனை செய்வார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து இப் பாத யாத்திரையில் கலந்து கொள்ளும் அடியார்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கந்தர்மடம் உதயநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஒன்றுகூடி புறப்படவுள்ளனர் என்று சப்த தீவக திவ்யஜீவன சங்க சமாஜத்தைச் சேர்ந்த க. இராமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

(ஐ–135)

# வரலாற்று எச்சங்கள் பாதுகாக்கப்படவேண்டும்

## மாநகர சபையிடம் வேண்டுகோள்

கொழும்புத்துறை, ஓக. 29

நல்லூரில் உள்ள வரலாற்று எச்சங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் யாழ். மாநகர சபையினர் ஈடுபடவேண்டுமென இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நல்லூர் முத்திரைச்சந்தியில் உள்ள அரச மாளிகை, சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள மந்திரி மாளிகை, அதன் முன்பாக உள்ள ஜமுனாரி தீர்த்தம் போன்றன பாதுகாக்கப்பட வேண்டும்.

அத்துடன் யாழ் மாநகர சபைக்குட்பட்ட இந்துக் கோயில்களதும், தர்மஸ்தாபனங்களதும் தர்மச்சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இதே வேளையில் நல்லூர் உற்சவத்திற்கு வரும் அடியார்கள் இத்தகைய வரலாற்று இடங்களைப் பார்வையிடுவதில் கூடுதல் அக்கறை செலுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது — என்று இந்து இளைஞர் பேரவை தெரிவித்துள்ளது.

(ஐ-ரி)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### நலமெலாம் அருள்வாய் கந்தா!

பரமனின் நெற்றிக் கண்ணினில் தோன்றிய
பொறிகளில் உதித்த கந்தனாம் பாலனே!
அரனவன் அளித்த வேலினை ஏந்தி
அசுரரை அழித்து அமரரைக் காத்தாய்!
சரவணா! சண்முகா! செந்தமிழ்த் தெய்வமே!
சஞ்சலம் தீர்த்திடு! நலமெலாம் அருளிடு!
சரணமென் றுன்பதம் பற்றினோம் ஐயனே!
நல்லையில் உறைந்திடும் வள்ளலே!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

### தொல்லை களையாயோ?

நல்லையிலே வீற்றிருக்கும் வேலவனே
எம்மவரிங்கு நிதம்படு பெரும்
தொல்லை களைய மாட்டாயோ!
சூரனைச் சங்கரித்தன்று தேவருக்கு
எல்லையிலாப் புகழுடனே வாழ்
வளித்த முருகோனே எங்கள்
நல்லைப்பதி நாயகனே வேல்கொண்டு
மயிலேறி வந்தெம் துயர்தீரையா!

துணவியூர் கேசவன்

# சமய சந்திதிகளில்

காரைநகர் ஓக, 29

யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 14 நாள்களும் தினமும் மாலை 4.00 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், விசேட பூஜை, வசந்தமண்டபப் பூஜை விநாயகப் பெருமான் உள்வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

(ஐ-73-135)

★ ★ ★

நெடுந்தீவுபுனிதமரியன்னை (மாதா) தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை திருச்சுற்றுப் பிரகாரத்துடன் நிறைவு பெறும்.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு. மொன்பெட் அடிகள் திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுப்பார்.

(ஐ-111)

★ ★ ★

மேலைப் புலோலி, வத்தனைப் பிள்ளையார் கோயில் மற்றும் வடமராட்சி கிழக்கு முள்ளியான் மண்டலாய் சித்திவிநாயகர் ஆலயம் ஆகியவற்றில் இன்று ஞாயிற்றுக்கிழமை மணவாளக் கோல அபிஷேகம் இடம்பெறும்

(ஐ-173)

★ ★ ★

வண்ணார்பண்ணை மேற்கு அருள்மிகு காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக மணவாளக் கோலவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறும். அன்றைய தினம் பகல் 11.00 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று. அலங்கரிக்கப்பட்ட யானை வாகனத்தில் திருவீதி உலாவும் நடைபெறும். (ஐ–ரி)

★ ★ ★

வலி. வடக்கு, ஓக. 29

மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

உற்சவ தினங்களில் 'ஸ்ரீ மஹாபக்த விஜயம்' என்ற தலைப்பில் சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். [க–86]

★ ★ ★

வலி. வடக்கு, ஓக. 29

தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயக ஆலய மகோற்சவகால அபிஷேகம் இன்று முதல் பன்னிரெண்டு தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. [க–86]

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்பட்டு வரும் திருத்தொண்டர் புராண இசைச் சொற் பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'அன்னம் பாலித்த அன்பர்' எனும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம்பெறும். [ஐ–ரி–30–103]

★ ★ ★

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி முதல் 7 00 மணி வரை யசோதா ஸ்ரீகுமாரனின் இசைக்கச்சேரி நடைபெறும்.

இதற்கு அணிசேர் கலைஞர்களாக கபல்விழி நாகேந்திரம் [வயலின்] என் மதிரூபன் [மிருதங்கம்] ஆகியோர் கலந்து கொள்வர்.

[ஐ–ரி–30–103]

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சிவலய அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமையன்று பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி வலய கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளதாகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எம். வி. செல்வராஜா தெரிவித்துள்ளார்.

(ஐ–ரி)

## செயலாளர் நியமிக்கப்படுவர்

வலி. தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைக்குப் புதிய செயலாளரை நியமிக்கத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

புதிய செயலாளரை வலி. தென்மேற்குப் பிரதேசசபைக் கவுன்சில் தேர்ந்தெடுக்கவுள்ளது.

இதுவரை காலமும் தற்காலிகமாகக் கடமையாற்றிய செயலாளர் எஸ். மனோகரன் செயலாளர் கடமையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் தொடர்ந்து எழுதுவினைஞராகக் கடமையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

### உதயவாக்கு

இளமைப் பருவத்திலேயே இறைவனிடம் மனத்தை நிலை நிறுத்துவதே சிறந்த செயலாகும்.

- பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

## எனக்கும் உனக்கும் பேதமேனோ!



வீர மாமயில் ஏறும் வேலவா — விளங்கு
கௌரி பாலகா வா
எனக்கும் உனக்கும் பேதமேனோ
எடுத்துச் சொன்னால் பேதம் போமோ
மணக்கும் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா

— யோகர் சுவாமிகள்

## நாளை

ஆவணி 13
திங்கட்கிழமை
திதி: சதுர்த்தி
பின் இரவு 1.05 வரை
நட்சத்திரம்: ரேவதி
நள்ளிரவு 11.47 வரை
சங்கடஹரகணபதி விரதம்
சுபநேரம்: 12.05—1.35
ராகுகாலம்: 7.35–9.05
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் இ. மகேந்திரன் மணிவிழா மலர்

29-08-1999

## ஒரு வித்தியாசமான மனிதர்

சுடருக்கு வயது 60. நம்ப முடியவில்லை. யாழ். இந்துக் கல்லூரியில் அவரை ஒரு விளையாட்டு வீரனாகப் பார்த்த காட்சிகள் உள்ளத்தில் பசுமையாக உள்ளன.

சுடர் ஒரு வித்தியாசமான மனிதர். அவர் ஒரு விளையாட்டு வீரன். இலக்கியவாதி, நல்ல பேச்சாளன், எழுத்தாளன். இத்தனைக்கும் மேலாக ஒரு சமயவாதி. ஆம். சற்று தீவிர போக்குக் கொண்ட சமயவாதி எனின் தவறாகாது. அதற்கு அவரது குடும்ப, சூழல் பின்னணிகள் காரணமாக அமைந்திருக்கலாம்.

பலர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றால் அனைத்துப் பணியில் இருந்தும் ஓய்வு பெற்று விடுவார்கள். சுடர் இ. மகேந்திரன் இதற்கு மாறுபட்டவராகக் காட்சியளிக்கின்றார்.

சாரணர் இயக்கத்திலும் சமய அமைப்புக்களிலும் அவரதுபணி இப்பொழுதுதான் பிரகாசிக்கின்றது. இந்நிலை என்றும் நீடிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**க. சண்முகநாதன்**
அரச அதிபர்
(தலைவர், யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்.)

## பண்பாளனுக்கு ஒரு மணிவிழா

நாங்கள் அன்று தமிழ் பள்ளிக்கூடம் என்று அழைத்த யாழ். இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் படித்த நாள் முதல், பின்னர் யாழ். இந்துக்கல்லூரியில் படித்த நாள்கள் கழிந்து, இன்றுவரை என்னுடன் அன்றும் போல் பழகிவரும் என் இனிய நண்பன் மகேந்திரன்.

மாணவனாய், ஒரு தரமான உதைபந்தாட்ட வீரனாய், பண்புள்ள மத்தியஸ்தராய், நல்ல சாரணனாய், நல்லாசானாய், நல்லதோர் அதிபராய் பல்வேறு கோணங்களில் நான் என் இனிய நண்பனைப் பார்த்து ஆனந்தப்பட்ட நாள்கள் பல. எந்த ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு தீவிரத்துடன், அதில் எந்த ஓர் எதிர்ப்பு இருந்தாலும் அவற்றை எல்லாம் வென்று, தனது வெற்றியை நிலைநாட்டும் போது ஒரு மெல்லிய புன்னகையை வெளிப்படுத்துவார்.

யாழ். இந்துக்கல்லூரியின் வளர்ச்சியோடு நண்பர் மகேந்திரனின் வாழ்வும் கலந்து நிற்பதை யாரும் மறக்க முடியாது.

அவருடைய பேர்த்தியாராகிய அமரர் புண்ணியநாச்சி அம்மையார் அன்போடு மனமுவந்து இந்துக்கல்லூரிக்கு அளித்த நிலத்தில்தான் இன்றைய வைரவர் ஆலயமும் அதன் அருகில் அமைந்துள்ள கட்டடங்களும் நிலை நிற்கின்றன.

மகேந்திரனுடைய இளமை நாள்கள் கல்லூரி வளவிற்றான் கலந்து நின்றன. இன்னும் நிற்கின்றன. கல்லூரியின் ஒவ்வொரு சம்பவத்திலும், அவர் ஈடுபடாத நாள்கள் இல்லை. யாழ். இந்துவின் புகழ் பூத்த மாணவர்களுள் அவரும் ஒருவர்.

கல்லூரி இந்து இளைஞர் மன்றம், சரித்திர மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்கள் யாவற்றிலுமே இவரது குரல்தான் ஓங்கி நிற்கும். யாழ். இந்துவுக்கு பல்வேறு துறைகளில் புகழ் சேர்த்த மாணவர் அணியில் இவரது பங்களிப்பு சாதாரணமானதல்ல. இவர் உதைபந்தாட்ட வீரனாய் மைதானத்தில் இறங்கினால் உற்சாகம் கரைபுரண்டு ஓடும்.

மகேந்திரன் சாரணனாய் இருந்த காலம் பொற்காலம். சாதாரண சாரணனாய் ஆரம்பித்து அதன் வளர்ச்சியில் தன்னை முற்றாக இணைத்து, அதில் உள்ள உயர்ந்த விருதுகள் பலதைத் தனதாக்கி, யாழ். மாவட்டத்தின் ஆணையாளராகத் திகழ்ந்ததைப் பலரும் மறந்திருக்க முடியாது.

யாழ். இந்துவின் சகோதரக் கல்லூரியான கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரிய சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட நண்பர் மகேந்திரன, தன்னை முற்றும் முழுதாக கல்லூரியோடு சங்கமமாக்கி விட்டு பல்வேறு நிலைகளில் சேவை புரிந்ததை நான் மகிழ்வோடும் பெருமையோடும் கண்டுள்ளேன்.

30 ஆண்டுகளுக்கு மேலாக கொக்குவில் இந்துவில் சேவை ஆற்றிய மகேந்திரன் ஆசிரியனாய், உபஅதிபராய், அதிபராய் இருந்த காலம் கல்லூரியின் பொற்காலம் என்றே கூறவேண்டும்.

எந்த ஒரு விடயமாக இருந்தாலும் ஒரு கண்டிப்பு, கண்காணிப்பு, அவதானம், பரிவு என்று பல்வேறு நிலைகளில் தனது ஆளுமையை நிலை நாட்டி தனது பணியை ஒழுங்காகச் செய்ததை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் நேரில் கண்டுள்ளேன்.

கொக்குவில் இந்துவில் அவர் அதிபராய் கடமை ஆற்றிய சமயத்தில் கல்லூரியின் கிரிக்கெட் அணி - வெற்றிகள் பல ஈட்டி முன்னணியில் நின்ற சிறப்பை எப்படி எடுத்துரைப்பது? அவர் மாணவருக்கு அளிக்கும் உற்சாகம் நிறைந்த உரைகள் அவ்வெற்றிக்கு உரமாக அமைந்தன என்பதை நான் இங்கு கூறத் தேவையில்லை.

கல்லூரியின் வளர்ச்சிக்காக வடபால் அமைந்துள்ள காணியை துணிவுடன் கொள்வனவு செய்து மாணவர்களைக் கொண்டே விவசாயத்தைச் செய்விக்க வேண்டும் என்று அவாக் கொண்டு பல முயற்சிகளை எடுத்தார்.

சமுதாய வளர்ச்சி என்பது கல்லூரி மாணவர்கள் மனப் பண்பின் வளர்ச்சியில்தான் தங்கி உள்ளது என்பதை எப்பொழுதுமே வலியுறுத்தும் நண்பர் மகேந்திரன் சமய உணர்வும், அறிவும் மாணவர் மத்தியில் நிச்சயம் இருக்க வேண்டும் என்ற விடயத்தில் மிகத் தீவிரமாய் நின்று செயற்பட்டார்.

யாழ். சைவபரிபாலன சபை, அதனோடு இணைந்த "இந்து சாதனம்" இதழ் ஆகியவற்றில் மகேந்திரனுடைய பங்களிப்பு அதிகம். எல்லாவற்றையும் விட யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் தோன்றிய 'சுடர்' என்னும் சஞ்சிகையின் பொறுப்பாசிரியராய் இருந்து சிறந்த இலக்கியவாதியாகக் திகழ்ந்த பெருமை அவருக்கு உண்டு.

**து. வைத்திலிங்கம்**
மேலதிக அரச அதிபர்,
(தலைவர், மணிவிழாக் குழு)

## நீடு வாழ்க!

திரு. இராஜதுங்கம் மகேந்திரன் உடனான எனது நட்பு பல தசாப்த வரலாற்றை உடையது. தொழிற் துறையில் கூட எனது அடியொற்றியவராகவே செயற்பட்டு வந்தமை விதியை வகுத்த இறையின் நியதி என்றுதான் கூறவேண்டும்.

அவர் ஆர்வம் கல்விப் புலத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கும் மேலாக உதைபந்தாட்டம், சாரணியம், நாடகம், பத்திரிகை எனப் பல்வேறு பரப்புக்களாக விரிவடைந்தன.

இவ்வாறு பல்வேறான புலங்களினூடாக வளர்த்துக் கொண்ட ஆற்றல் ஆசிரியராகவும், உப அதிபராகவும் அதிபராகவும் பணி செய்த காலத்தில் அவரை மிகுந்த ஆளுமை கொண்ட நிர்வாகியாக உயர்த்தியது. அவர் செயற்பட்ட பதவிகள் அத்தனையிலும் தனக்கென ஓர் முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளார்.

**அ. பஞ்சலிங்கம்**
ஓய்வுபெற்ற அதிபர் - கொக்குவில் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி



சுடர்' இ.மகேந்திரன்

பிறப்பு 1939-05-18

கல்வி

| | |
|---|---|
| 1943 | யாழ். இந்து தமிழ் பாடசாலை |
| 1947 | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி (H.S.C. வகுப்புவரை) |
| 1957 | யாழ்ப்பாணக் கல்லூரி H.S.C., பல்கலைக்கழக அனுமதி |
| 1958 - | இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதெனியா பட்டப்படிப்பு |
| 1980 - | கொழும்பு பல்கலைக்கழகம் பட்டப்பின் படிப்பு |

பரீட்சைகள்

| | |
|---|---|
| 1954 - | SENIOR SCHOOL CERTIFICATE GENERAL CERTIFICATE OF EDUCATION |
| 1958 - | HIGHER SCHOOL CERTIFICATE |
| 1963 - | B.A. |
| 1976 - | FIRST EXAMIBNATION IN LIBRARY SCIENCE |
| 1980 - | DIPLOMA IN EDUCATION |

ஆசிரியர் சேவை -

| | |
|---|---|
| 1960-10-05 | கொக்குவில் இந்துக்கல்லூரி |
| 1972 - | வ/ஓமந்தை ம.வி. |
| 1975 - | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 1980 - | மாங்குளம் ம.வி. |
| 1984 - | கொக்குவில் இந்துக்கல்லூரி பிரதி அதிபர் அதிபர் (பொறுப்பு) கொத்தணி அதிபர் - கொக்குவில் |
| 1993 - | சிறிலங்கா அதிபர் சேவை தரம் 1 |
| 1996 - | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் |
| 1996 - | மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி, பிரதிக் கல்விப்பணிப்பாளர் |
| 1998 -10-01 - | உதவிக்கல்விப்பணிப்பாளர் துனுக்காய் கல்வி வலயம் |
| 1999-04-28 - | உதவிக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் கல்விவலயம் |
| 1999-05-17 - | இளைப்பாறுதல். |

## ஏணிப்படியாக உழைத்தவர்

கொக்குவில், யாழ். இந்துக் கல்லூரிகளில் அதிபராகக் கடமையாற்றிக் கல்விச் சமுதாயம் வளர்ச்சியுற்று மேன்மையுறச் செய்தவர் தான் எம் அதிபர் திரு. இராஜதுங்கம் மகேந்திரன்.

யாழ். இந்துக்கல்லூரியில் தன் திறன்கள் அனைத்தையும் வெளிக்கொணர்ந்து, நன்மாணாக்கனாகக் கல்வி கற்றுப் பல்கலைக்கழகம் சென்று, பலகலைகளும் கற்றுத் தேர்ந்து, பட்டம் பெற்று கொக்குவில் இந்துவின் நல்லாசிரியராக, உப அதிபராக, அதிபராக்ப் பணிபுரிந்து அவராற்றிய சேவைகள் கணக்கிலடங்கா வியத்தகு சேவைகளேயாம்.

கொக்குவில் இந்துவின் மைந்தர்களை ஏறத்தாழ முப்பது வருடங்கள் தன் ஆளுமையின் கீழ் நல்வழி நடத்தி மேனிலைப் படுத்திய ஏணிப்படியாக நின்று உழைத்த பெருந்தகையாளர் தான் எம் அதிபர். அவரது பலதுறை சார்ந்த ஆளுமையின் கீழ் வளர்ந்தவர்களில் நானும் ஒருவன் என்பதை இங்கு குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றேன்.

கல்லூரியின் விளையாட்டு, சாரணீயம் போன்ற சகல இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் தானும் ஒருவராக நின்று கல்லூரியின் வளர்ச்சியை முன்னெடுக்க அரும்பாடுபட்டு உழைத்து, கொக்குவில் இந்து அன்னையின் நாமத்தை நாடளாவப் பரவச் செய்த பெருமையும் இவருக்குண்டு.

அன்னையின் வளர்ச்சிப் படிகளில் "பாண்ட்" வாத்திய இசைக் குழுவை உருவாக்கித் திறம்பட செயற்பட வைத்தவர். சைவபரிபாலன சபைத் தலைவராகச் சமய தொண்டுகள் புரிவதிலும் முன்னின்று உழைத்தவர் எம் அதிபர்.

வன்னி மண்ணில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றித் தன் சேவையினின்று ஓய்வு பெறுமுகமாக யாழ். மண்ணிலும் சிறிது காலம் தன் சேவையைத் தொடர்ந்து இளைப்பாறியுள்ளார்.

இன்றும் இளைஞனாக சுறுசுறுப்புடன் செயலாற்றும் எம் அதிபர் அவர்களும், அவர்தம் குடும்பத்தாரும் எல்லா வளமும் பெற்றுச் சீரும் சிறப்புடன் திகழ எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியன் அருள் புரிவான்.

**பொ. சந்திரநாதன்**
(செயலாளர், மணி விழாக்குழு.)

## சமுதாயச் சிற்பி

கொக்குவில், யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரிகளின் அதிபராகவும், வன்னிப் பகுதியில் கல்வி நிர்வாகியாகவும் 40 வருடங்களுக்கு மேல் கல்விப் பகுதியில் பணிபுரிந்து அண்மையில் இளைப்பாறிய சுடர் மகேந்திரன் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1954 ஆம் ஆண்டில் யாழ். இந்துக் கல்லூரி மாணவனாக அறிமுகமாகிய சுடர் மகேந்திரனுக்கும் எனக்குமிடையில் இன்றுவரை நெருக்கமான உறவு நிலவி வருகின்றது. இக்காலப் பகுதியில் அவருடைய செயற்றிறன், பேச்சுத் திறன், அர்ப்பணிப்பு போன்றவற்றை நேரில் காண முடிந்தது.

திரு. மகேந்திரன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சூழலில் பிறந்து வளர்ந்தது மாத்திரமன்றி, அக்கல்லூரியின் வளர்ச்சியிலும், கல்லூரிப் பழைய மாணவர்சங்க செயற்பாடுகளிலும், பழைய மாணவர்களின் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டவராக விளங்குகின்றார். தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், சமுதாய மேம்பாட்டிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

இந்து சமய, கலாசார அமைப்புகள் பலவற்றில் அங்கத்தவராக விளங்கி சிறந்த நற்பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார். இவரது சேவை தமிழ்ச் சமுதாயத்துக்குத் தொடர்ந்து கிடைக்க இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளையும் தேக சுகத்தையும் கொடுக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
(துணைவேந்தர்,யாழ். பல்கலைக்கழகம்.)

## மனிதநேயம் மிக்கவர்

எமது கல்லூரித் தாயான கொக்குவில் இந்துக் கல்லூரியின் 1960 ஆம் ஆண்டு ஆசிரியராகப் பணியேற்றவர் திரு. இ. மகேந்திரன். நீண்டகால ஆசிரிய சேவையின் பின் இக் கல்லூரியிலேயே அதிபர் பதவியைப் பெற்று பெருமையுடன் சேவையாற்றியது மட்டுமன்றி, யாழ் இந்துவின் அதிபராகவும் பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

அவர் கொக்குவில் இந்துவில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் நல்லாசிரியராக மட்டுமன்றி ஒழுக்கத்தை மாணவர்களிடையே இறுக்கமாகக் கடைப்பிடித்தவர். வரலாற்றுப் பாடத்தையும், பொருளியல், தமிழ் போன்ற பாடங்களையும் சிறப்பாகக் கற்பித்து பல மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமை இவருக்குண்டு.

அதிபர் பதவியை 02-05-1991 இல் பெற்ற பொழுது திரு. அ. பஞ்சலிங்கம் அதிபர் அவர்கள் விட்டுச் சென்ற பணியை சிறப்பாக நடத்தியவர். இவரது காலத்தில் இக்கல்லூரி பல்வேறு வளர்ச்சிகளைப் பெற்று உயர்வடைந்தது. ஆண்களுக்கான பாண்ட் வாத்தியத்தை எமது கல்லூரியில் உருவாக்கி யாழ். மாவட்டத்திலேயே சிறப்பிடம் பெறவைத்தவர்.

எமது கல்லூரியின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியராகவும், சிறந்த பயிற்றுநராகவும் விளங்கி உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் இரண்டிலும் பல்வேறு திறமைகளை ஏற்படுத்தி கல்லூரிக்குப் புகழ் தேடித்தந்தவர். குறிப்பாக எமது கல்லூரியின் உதைபந்தாட்டச் சாதனைகளுக்குக் காரணகர்த்தாவாக விளங்கியவர் என்றால் மிகையாகாது. எமது கல்லூரிச் சாரணிய மாணவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டியவர். அத்துடன் யாழ். மாவட்ட சாரணியத்தின் ஆணையாளராகவும் விளங்கியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றோடு பாடரீதியான, சேவைரீதியான மன்றங்கள், கழகங்களைப் பாடசாலை மட்டத்தில் உருவாக்கி, மாணவர்களின் திறமைகளுக்கமைய அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதில் முழு ஆர்வங்காட்டியவர்.

இவர் அதிபர் பதவியை ஏற்ற காலத்திலிருந்து எமது பிரதேசம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிய போதும் அவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து கல்லூரியை வளர்த்தெடுத்த செயற்றிறன் மிக்க அதிபராக விளங்கியவர். இதனால் இக்கல்லூரிச் சமூகம் இவர்மீது மட்டற்ற மதிப்பும் ஆதரவும் வைத்திருந்ததை நான் நன்கறிவேன்.

சிறந்த கல்விமான், பண்பாளன், நிர்வாகி, பேச்சாளன், எழுத்தாளன், மனித நேயம் மிக்கவர் - இத்தகைய பண்புகள் பலகொண்டு விளங்கியவரைக் கல்வியுலகம் இலகுவில் மறந்து விடமுடியாது.

**பொ. கமலநாதன்**
(அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி)

## சமூக சேவையாளன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அன்னையால் வளர்க்கப் பெற்ற நன்மக்கட் பேறுகளில் இ. மகேந்திரனும் ஒருவராவார்.

அவரிடத்தில் நிறைந்திருக்கும் அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், இரக்கம், துடிப்பு ஆகிய பண்புகளை உயிர்களுக்கெல்லாம் பயன்படும் வகையில் உயிரூட்டி வளர்த்தவள் கல்லூரி அன்னையே என்றால் மிகையாகாது.

எமது கல்லூரியில் ஆரம்பக்கல்வி முதல் உயர்தர வகுப்பு வரை கல்வி பெற்ற பெருமையால் மகிமை பெற்றவர்.

ஆசிரியராக, அதிபராக, கல்வியதிகாரியாக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி வழி நின்று பணியாற்றினாராயினும் பதவிகளுக்கு அப்பாற் சென்று தொண்டாற்றினார்.

சமூக சேவையே தன் தேவையெனக் கொண்டு நலிந்து நொந்திருக்கும் மக்களுக்கு ஆற்றும் சேவையால் மனநிறைவு கொள்பவர். தனது சேவையால் நிறைவு பெற்ற மனமகிழ்ச்சியே மணிவிழா நாயகனை அழகும் இளமையும் துடிப்பும் மிக்க இளைஞனாகத் திகழவைக்கிறது.

ஆலயங்கள் முதல் விளையாட்டரங்குகள் வரை அவரது சிந்தனைச் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து உயர்ச்சி பெற வாழ்த்துகின்றேன்.

**அ. சிறிக்குமாரன்**
அதிபர்,யாழ். இந்துக் கல்லூரி.

## புகழ் பூத்த அதிபர்

வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டவர்கள் நாம். அவரது ஆற்றலும் அனுபவமும் எனக்கு மிகவும் உதவியாக இருந்தன; இருப்பன.

புகழ் பூத்த அதிபரில் ஒருவராகிய திரு. இ. மகேந்திரனின் சேவைக்காலம் ஒப்பற்றது. எமது கல்லூரியில் தொடர்ச்சியாக 33 வருடகாலம் சேவை செய்த ஒருவர் எம்மை விட்டுப் பிரியும் போது கண்கலங்காமல் எவரும் இருக்க முடியாது.

அவரது சேவை பழைய மாணவர்களுக்கும் எமக்கும் இன்றியமையாதது மட்டுமல்லாது தொடர்ந்தும் கிடைக்கும் என்ற பரிபூரண நம்பிக்கை எமக்கு உண்டு.

**தம்பிஜயா தேவராசா**
(தலைவர், கொக்குவில் இந்து பழைய மாணவர் சங்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்குளத்தில் திறக்கப்பட்ட பாதை நின்று நிலைக்குமா என்பதில் ஐயம்

## வவுனியா வலம்

ரா.இளவரசன்

வன்னிப் பாதை திறக்கப்பட்டு விட்டது. வவுனியாவுக்கு வந்து மாதக் கணக்கில் தங்கி நின்றுவிட்டு போக முடியாமல் திண்டாடியவர்கள் போய்ச் சேர்ந்துவிட்டனர். அதே போல் வன்னியில் இருந்து வர முடியாமல் தவித்து நின்றவர்களில் முதற்கட்டமாக 504 பேர் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமையும், 426 பேர் கடந்த 25 ஆம் திகதியும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இத்துடன் வன்னிக்கான பாதைப் பிரச்சினை தீர்ந்து விட்டது என்றும்- போக்குவரத்து சுமுகமாகிவிட்டது என்றும் பெருமூச்சு விட்டவர்கள் பலர்.

தமது உறவினர்களைப் பார்க்கப் போய் வன்னியையும் ஒரு தடவை பார்த்து விட்டுவரலாம் என்றிருந்தவர்கள் பலர். வவுனியாவுக்குப் போய் வெளிநாடுகளிலே உள்ள பிள்ளைகளுடன் சகோதரர்களுடன் பேசலாம்; பணம் வாங்கலாம் உடுப்பு வாங்கலாம் என்றெல்லாம் ஏராளமான திட்டங்களுடன் இருந்தவர்கள் பலர். ஆனால் இப்போதைய நிலைமை அப்படியல்ல. அடுத்த கட்டம் என்ன என்ற நிலை. ஆங்கிலப் படங்களையும் மர்ம நாவல்களையும் மிஞ்சிவிடக் கூடிய அளவிற்கு இனி என்ன நடக்குமென்று தெரியாமல் எல்லோரும் திகைத்துப்போய் இருக்கிறார்கள்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் இனிமேல் வழமையான போக்குவரத்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் இன்னமும் சாதாரணமான போக்குவரத்து ஆரம்பிக்கவில்லை. அங்கேயும் சரி: இங்கேயும் சரி பெயர்களைப் பதிந்து - காத்திருந்து ஒரு குறிப்பிட்ட தினத்தில் மட்டுமே போக்குவரத்து நடைபெறுகிறது. அதுவும் வன்னிக்கு வெளியே வசிப்போரும் வவுனியாவில் தங்கியிருப்போரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் வரையே இந்தப் பதிந்து அனுப்பும் போக்கு வரத்து ஏற்பாடு. அதன் பின்னர் அதுவும் சந்தேகம்தான். புலிகளின் தரப்பைப் பொறுத்தவரை மாங்குளம் ஊடான பாதை திறப்பில் ஈடுபாடு கொண்டவர்களாக அவர்கள் இல்லையென்றே வன்னியில் இருந்து வருவோர் கூறுகின்றனர். ஏனென்றால் ஏற்கனவே இவ்வாறு திறக்கப்பட்ட பாதைகளாலேயே படையினர் பல இடங்களிலும் முன்னேறியதை அவர்கள் மறக்கத் தயாராக இல்லை. அதனால்தானோ என்னவோ பொது மக்கள் பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லைப்பகுதியில் உறுதியானதும் பலம்மிக்கதுமான பங்கர்களை அவர்கள் அமைத்து வருவதாக அங்கிருந்து வருவோர் கூறுகின்றனர்.

இதேவேளை ஏற்கனவே அனுப்பப்பட்டவர்கள் தவிர இப்போது 500 பேர் வரையானோர் வவுனியாவில் வந்து தங்கியிருக்கிறார்கள். தென் பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வன்னிக்கு செல்ல வந்தவர்களே இவர்கள். இவர்களின் நிலையும் பரிதாபகரமாக இருக்கிறது. இவர்கள் அனைவரும் அன்றாடம் வவுனியா செயலகத்துக்குச் சென்று தமது பயணத்திற்கு ஏற்பாடு செய்து தரும்படி அரச அதிபரை நச்சரித்து வருகிறார்களாம். நச்சரிப்புத் தாளாமல் அவர்கள் அனைவரையும் செயலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யும் படி அரச அதிபர் கே. கணேஷ் கூறியிருக்கிறார். பயணத்திற்கு முயற்சி செய்து பார்ப்போம் என்றும் அவர் சொல்கிறார்.

வன்னியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் வவுனியா வருவதற்காக அனுமதி பெற்று விட்டு ஆவலோடு காத்திருக்கிறார்கள். கடந்த 9 ஆம் திகதி மாங்குளம் பாதை திறக்கப்பட்டதன் பின்னரும் 11 ஆம் திகதி வரை வன்னியில் பாஸ் வழங்கப்பட்டதாம். 11 அம் திகதி பத்து மணியளவில் திடீரென பாஸ் வழங்குவது தடைப்பட்டதாம். பாதை திறந்து விட்டதால் பாஸ் எடுக்கவென ஆவலாக இருந்தவர்கள் அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டனராம்.

அதன் பின்னர் வவுனியாவிற்கு செல்ல வேண்டியவர்களை சில குறிப்பிட்ட இடங்களில் பெயர்களைப் பதிவு செய்யும்படி பணிக்கப்பட்டது. அவ்வாறு பெயர் பதிந்த அனைவரும் விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவு காரியாலயத்துக்குச் சென்று முன்னுரிமைக்கடிதம் பெற்று வரும்படி அறிவுறுத்தப்பட்டனர். அதன்படி அரசியல்துறைச் செயலகத்துக்கு சென்றவர்களுக்கு அத்தியாவசியத் தேவைகளுக்கு செல்பவர்களுக்கும் வன்னிக்கு வெளியே வசிப்பவர்களுக்கும் மட்டுமே கடிதம் வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டதாயினும் - இது வரை அறிவிப்பு ஏதும் விடுக்கப்படவில்லை.

பொதுவாகவே அத்தியாவசியத் தேவைகள் தவிர அனாவசிய காரணங்களுக்காக வவுனியா சென்று வருவோர் மீது புலிகளின் புலனாய்வுத்துறை ஒரு கண் வைத்தபடியேதான் இருக்கிறது. வியாபாரிகள் என்ற பெயரில் வவுனியாவுக்கு வந்து சில சில்லறைச் சலுகைகளுக்காக புலிகளின் ரகசியங்களை கசிய விடுவது பற்றி புலிகள் காலம் காலமாக ஆத்திரமுற்றவர்களாகவே இருக்கின்றனர். வன்னியில் இருந்து வரும் வியாபாரிகளை மதுபானம் வாங்கிக் கொடுத்தும் வன்னிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிப்பதன் மூலமும் வளைத்துப்போடும் படைத்தரப்பு புலனாய்வுப் பிரிவினர் - அவர்களைக் கொண்டு புலிகளின் நடமாட்டங்கள், அடுத்த கட்ட செயல்பாடுகளை அறிந்து கொள்வது வழககம். இதனால் வியாபாரிகள் மீதும், அதிலும் தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்லும் வியாபாரிகள் மீது புலிகள் விசாரணை கெடுபிடிகளை விதிப்பது வழக்கம்

இதன்படி கடந்த சில மாதங்களுக்கு முன் உயிலங்குளம் பாதை திறந்திருந்த போது திடீரென புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் பள்ளமடுப்பகுதிக்கு வந்தனராம். வவுனியா வருவதற்காக காத்திருந்த 93 வியாபாரிகளை அழைத்து பஸ்களில் ஏற்றிச் சென்றனர். அவர்கள் நீண்ட நாள்களாக தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். சிலர் கடந்த பல நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபின் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர். அந்த விசாரணைகளில் அதிர்ச்சி தரும் தகவல்கள் புலிகளுக்குத் கிடைத்துள்ளதாம். சிலர் வியாபாரம் என்ற லேபலின் கீழ்படையினரின் கையாள்களாகவே செயற்பட்டதும், முக்கிய தகவல்கள் போட்டோக்கள் என்பன படையினருக்குக் கிடைக்க அது வழி செய்ததும் அறிய வந்ததாம். இதனால் அவசிய அலுவல்களின்றி வவுனியாவுக்குச் செல்வோரைக் கட்டுப்படுத்த புலிகள் திட்டமிட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

ஆயினும் மாங்குளம் ஊடான பயணத்துக்குத் தகுந்த ஒத்துழைப்பு வழங்காமல் அரசாங்கமும் படையினரும் இழுத்தடித்து வருவதாகப் புலிகள் தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால் அரசாங்கத் தரப்பு அதனை வன்மையாக மறுக்கிறது.

பாதை திறந்த படியேதான் இருக்கிறது - பயண ஒழுங்குகளுக்கு நாம் தயாராகவே இருக்கிறோம் என்கிறார்கள் அவர்கள்.

அதற்குச் சாட்சியாக கடந்த 23 ஆம்திகதி திங்கட்கிழமை வன்னியிலிருந்து வரும் மக்களை வரவழைத்துவர உள்ளூர் செய்தியாளர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கே மாங்குளம் பாதை திறப்பில் அரசாங்கத்தின் ஈடுபாடு தெளிவுபடுத்தப்பட்டது. ஏராளமான இராணுவ உயர் அதிகாரிகள் வவுனியா அரச அதிபர் கே.கணேஷ், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் வந்துநின்று தடங்கலின்றி பயணிகளை உள்ளே வர அனுமதித்தனர். முரண்பாடுகள் ஏற்படும் போது உடனே கொழும்பு வரை தொடர்பு கொண்டு அவை நீக்கப்பட்டன.

பொது மக்கள் பாதுகாப்புப் பகுதியிலே நின்ற இராணுவத்தினர் ஆயுதங்கள் இன்றியே காணப்பட்டனர். உயரதிகாரிகளும் - மெய்ப்பாதுகாவலர்களும் ஆயுதங்கள் இன்றியே நடமாடினர். இந்த விடயத்தில் செஞ்சிலுவைச்சர்வதேசக்குழு இறுக்கமாகவே நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

அதேவேளை வன்னிக்குச் செல்வோருக்கும் வன்னியில் இருந்து வருவோருக்கும் பயணம் இலகுவானதாக அமைய அவர்கள் ஆவன செய்தபடியே இருந்தனர். பாதை திறக்கப்பட்ட 9 அம் திகதியன்று பயணிகள் பஸ்களிலே சென்று மாங்குளத்தில் இறங்கி கொஞ்சத் தூரம் நடந்து சென்றே படையினர் எல்லையைக் கடக்கவேண்டி யிருந்தது. ஆனால் 23 ஆம் திகதி செய்தியாளர்கள் அங்கு சென்று பார்த்த போது பஸ்நிலையம் இன்னும் முன்னால் கொண்டு செல்லப்பட்டு படையினரின் முன்னரங்க எல்லைக்கு அண்மையிலேயே அமைக்கப்பட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இன்னும் பயணிகளுக்கு வசதியாக கன்ரீன் ஒன்று திறக்கப்பட்டிருந்ததுடன் மலசல கூடங்களை அமைக்கும் வேலைகளும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. சோதனை செய்வதற்கும், பயணிகளைப் பதிவதற்கும் கூட கொட்டகைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு படையினரும் வவுனியா செயலகத்தினரும் வன்னிக்குப் போகும் - வரும் பயணிகளுக்கு வசதிகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருக்க-

அந்தப் பக்கத்தில் புலிகள் எந்த வித ஆயத்தங்களும் செய்யவில்லை எனச் சொல்கிறார்கள். பயணிகள் வன்னிக்கு வெளியே பயணஞ் செய்வோர் பழைய முறிகண்டி என்ற இடத்திற்கு அண்மையில் பஸ்கள் மூலம் வந்து சேர்கின்றனர்.

அங்கே ஒரு மரத்தின் கீழ் வைத்து அவர்களது அனுமதிக் கடிதங்கள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

பின்னர் உணவுப் பொருள்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழித்துணையுடன் வரும் லொறிகளில் ஏற்றப்பட்டு புலிகளின் முன்னரங்கப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும். மக்கள் - அங்கிருந்து கால் நடையாக இராணுவக் கட்டப்பாட்டுப் பகுதியை வந்தடைகிறார்கள்.

இடையில் பயணிகள் தங்க வைக்கப்படவோ பரிசோதனை செய்யப்படவோ எந்தவிதக் கொட்டகைகளும் அமைக்கப்படவுமில்லை. அமைக் கப்படும் உத்தேசமும் இல்லை என்றே வந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். இவைகளை வைதது்ப் பார்க்கும் போது புலிகள் மாங்குளம் பாதையில் இன்னும் நம்பிக்கை கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

ஆயினும் உணவுப் பொருள்களுக்கான லொறிப் போக்குவரத்துக்கும் தொண்டர் ஸ்தாபனங்களினதும் வாகனப் போக்குவரத்துக்கும் புலிகளின் ஆதரவு போதுமானதாகவே இருக்கிறது. என்பதும் சில விடயங்களைச் சிந்திக்க வைக்கிறது.

அதாவது மாங்குளம் பாதையைப் பொறுத்தவரை புலிகளுக்கு 'கரணம் தப்பினால் மரணம்' என்ற நிலை தான். தற்போது இராணுவம் நிலை கொண்டிருக்கும் பகுதியிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரம் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதேசம் அங்கு ஆயுதங்களுடன் நடமாடக் கூடாது: மோதல்களில் ஈடபடக் கூடாது என்பது விதி. மாங்குளம் முன்னரங்கத்திலிருந்து பொதுமக்கள் பாதுகாப்புப் பகுதியை அடுத்து பழைய முறிகண்டி - கொக்காவில் சந்தி, முறிகண்டி ஆகிய இடங்களை அடுத்து இருப்பது கிளிநொச்சி அடுத்தது பரந்தன். மாங்குளம் சந்தியிலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தில் பரந்தனில் படையினர் நிலை கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஏற்கனவே மூன்றுமுறிப்பூடாக மக்களை அனுப்பிவிட்டு - அதே பாதையூடாக இராணுவம் முன்னேற முயற்சித்தது என்ற குற்றச்சாட்டிருக்கும் நிலையில் அவ்வாறாகவோ அல்லது ஏற்கனவே சேந்தாங்குளம் பகுதியில் முன்னேறியது போல் பகலில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் நின்றுவிட்டுச் சென்றுவிட இரவில் முன்னேறியது போல முன்னேறி விட்டால் இலகுவாக படையினர் பரந்தனை அடைந்து விடுவர். படையினருக்கும் புலிகளுக்கு மிடையில் பலப்பரீட்சையாக மட்டுமல்லாது கௌரவப் பிரச்சினையாகவும் இருக்கும் யாழ். பாதை அதனால் திறக்கப்பட்டுவிடும். இவ்வாறான சிக்கல்களே மாங்குளம் பாதையூடான போக்குவரத்துக்கு பயணிகளை அனுமதிப்பதில் புலிகள் பின்நிற்பதற்கும் காரணமாக அமையலாம் என்றே கருதப்படுகிறது. இதற்கு படைத்தரப்பின் நடவடிக்கையில் புலிகளுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். மாங்குளம் பாதை பாவனையிலிருக்கும் காலாதி காலத்துக்கும் செஞ்சிலுவை சர்வதேச குழுவின் வழித்துணை இருக்கவேண்டும். இவையெல்லாம் இருந்தால் புலிகளின் மனம் மாறக்கூடும்.

வழமையான போக்குவரத்து ஆரம்பிக்கக் கூடும்.

இவையெல்லாம் சாத்தியப்படுமா என்பதே இப்போது அனைவரினதும் கேள்வி.

## எதிரொலி

● மரக்கறி பயிரிடுவோருக்கு ஏற்படும் நட்டத்தைத் தவிர்ப்பதற்காக, அறுவடை செய்வதற்கு முன்னரே கொள்வனவு ஒப்பந்தங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*** இந்தத் திட்டமும் வெற்றியளிக்காவிட்டால், அறுவடை செய்வதற்கு முன்னரே 'சாப்பிடும்' ஒப்பந்தம் ஏதாவது செய்யப்படுமோ? எனக் கிண்டலடிக்கிறார் ஓர் உற்பத்தியாளர்!**

● பா.மா.கா.வினாற் கைவிடப்பட்ட அமைச்சர் 'தலித்' ஏழுமலை, தன் ஆதரவாளர்களுடன் அ.இ.அ.தி.மு.க.விற் சேர்ந்துவிட்டார்.

*** தான் 'தலித்' ஏழுமலையே தவிர 'தனித்'(த) ஏழுமலை அல்ல என்பதை நிரூபித்து விட்டார்!**

● இனப்பிரச்சினை அடுத்த ஆண்டின் இறுதிக்குள் தீர்க்கப்பட்டு விடும் என ஜனாதிபதி கூறுகின்றார்.

*** இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, அரசியல்வாதிகளின் நாக்கில் 'அடுத்த ஆண்டு' அடுத்தடுத்து வந்து கொண்டேயிருக்கும்!**

● அரசின் ஐந்தாண்டுச் சாதனைகளைக் காட்டும் அலங்கார வண்டிகளின் பவனி, கொழும்பில் இடம்பெற்றது.

*** நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கி அசுர வேகத்திற் சென்று கொண்டிருக்கின்றது் அதை மறைக்கமுயலும் அலங்கார வண்டிகள் 'ஊர்'கின்றன.**

● எப்படியாவது வெற்றி பெற்றுவிடவேண்டும் என்ற நோக்கில் தமது கொள்கைகளைக் கைவிட்டு, புதிய புதிய கூட்டணிகளை இந்திய அரசியற் கட்சிகள் உருவாக்கி வருகின்றன.

*** கொள்கைகளைக் கொள்ளைபோக விட்டுவிட்டு கொள்ளையையே தம் கொள்கையாக்கி விட்டனவோ?**

● அடுத்த பிரதமர் யார் என்பதைக் கூறுவதை ஜெயலலிதா தவிர்த்தே வருகின்றார்.

*** முன்னர் மூக்குடைபட்ட நினைவு இந்த நா(ன்) அடக்கத்துக்குக் காரணமாக இருக்குமோ?**

● உதயன் பத்திரிகை அலுவலகத்தின் மீது கிறனேட் வீச்சு!

*** ஆத்திரக்காரர்/அதிருப்தியாளர்/அநாமதேயங்கள்/ மின்னல் வேகத்தில் இந்த அதிரடியை அரங்கேற்றி இருக்கின்றார்கள்!**

● முக்கியமான கொழும்பு வீதிகள், போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்ததால், விமானப் பயணிகள் பலர் தம் பயணத்தைத் தவறவிட்டு விட்டனர்.

*** ஆகாசப் புளுகுகளைக் கேட்டுவிட்டு, ஆறுதலாக ஆகாசப் பயணங்களை மேற்கொள்ளலாம் என்பதுதான் வீதித் தடையின் உள்நோக்கமோ?**

*-இடியன்-*

# அருட்காட்சி காண விரும்புவோருக்கு ஆன்மீக சாதனை அவசியம்

திருமுருக கிருபானந்த வாரியார்

குடத்தைப் பார்த்தவுடன் குடத்தைச் செய்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்பது உறுதி ஆகிறது. உலகம் காரியப்பாடுடையது. காரியம், கர்த்தா இன்றி நிகழாது.

அதேபோல உலகைப்பார்க்கும் போது, உலகைப்படைத்த ஒரு பரம்பொருள் உண்டு என்று மதிப்பதுவே அறிவுடைமை. ஆனால் அது கண்களுக்குத் தெரியவில்லையே என்று ஐயுறுவது மடமை.

"இரவில் ஆகாயத்தில் பல நட்சத்திரங்களைப் பார்க்கிறாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆதலால் பகல் நேரத்தில் நட்சத் திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞான நிலையில் நீ இறைவனைப் பார்க்க முடியாததால் இறைவனே இல்லை என்று சாதிக்காதே" என்கிறார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

மலரிலுள்ள மணம் கண்ணுக்குத் தோன்றுகிறதா? நெருப்பில் உள்ள சூடு கட்புலனுக்குத் தோன்றுகிறதா? கடல் நீரில் உள்ள உப்பு கண்ணுக்குத் தோன்றுகிறதா? இல்லையே!

எனவே, உணர்வு விழியினால், உணரப்படுகிற பொருளே பரம் பொருள் என்றாகிறது. அந்த உணர்வு உலக நிலையிலிருந்து நீங்கி, உலகை மறந்து, உள்ளத்தையும் மறந்து, உணர்வையும் மறந்து, உயிரையும் மறந்தபோது அரும்புகிற ஒன்று. நூலறிவினால் வாலறிவனைக் காணஇயலாது

பாலில் நெய் இருக்கிறது; தெரியவில்லை. கண்ணுக்குத் தெரியாததால், பாலில் நெய் இல்லை என்றால் நம்மை அறிவுள்ள உலகம் பழிக்கு மன்றோ?

ஆகவே கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அருளோடு நீக்கமற நிறைந்திருக்கிறார். இது உறுதி, முற்றிலும் உண்மை.

உலகிலே இறைவன் எங்கும் நிறைந்திருப்பானரானால், உலக மாயை அவனைப் பற்றாதா? பற்றாது. எதுபோல்?

"துன்பம், பாவம், வேதனை போன்றவை இந்த உலகில் இருக்கின்றனவே! அவைகளில் பாதிக்கப் படுபவர்கள் ஜீவர்களே தவிர பிரம்மம் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பகம்**

# அம்பாறை சிறுபான்மையோர் நிலங்களின் அபகரிப்புக்கு வித்திட்ட கல்லோயாத் திட்டம்

## இன்று பொன்விழா காண்கிறது

**அம்பாறை அஞ்சல்**
**— அகீல் —**

அம்பாறை மாவட்டம் வளம் கொழிக்கும் பிரதேசமாக மாறுவதற்கும்,இலங்கையின் அரிசித் தேவையில் நான்கில் ஒரு பங்கை உற்பத்தி செய்யும் விவசாய மாவட்டமாகத் திகழ்வதற்கும் கல்லோயாத் திட்டம் தான் காரணம்.

இந்தத் திட்டம் இந்த மாவட்ட மக்களுக்குக் கிடைத்த இறைவனின் அருட்கொடை என்றொரு சாராரும்,—

இல்லை,இந்த கல்லோயாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்துதான் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறுபான்மை இனங்களின் நிலங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாய் பறிக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன என்ற 'குற்றச்சாட்டை' மற்றொரு சாராரும்—

கூறிவரும் வேளை இந்தக் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் ஐம்பதாண்டு நிறைவைக் கண்டுள்ளது.

மேற்படி இரு கருத்துக்களும் நூறு வீத உண்மைத் தன்மையைக் கொண்டுள்ள போதிலும் கல்லோயாத் திட்டம் இந்த மாவட்ட மக்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்தத் தவறவில்லை என்பதை அழுத்திச் சொல்ல வேண்டியுள்ளது.

கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கையின் முதலாலது பிரதமர் தேசபிதா அமரர் டி. எஸ். சேனநாயக்க 1949-08-28 இல் சேனநாயக்க சமுத்திரத்துக்கு அடிக்கல் நட்டார்.

இதன்படி ஐம்பதாண்டு நிறைவு பெற்றுள்ள கல்லோயா பல நோக்குக் கருத்திட்டத்தின் பொன் விழாவைக் கொண்டாட அம்பாறை மாவட்டத்தில் கட்சிபேதங்களின்றி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யூ. எவ். எம். முகைடீன் நாடாளுமன்றத்திலும், அம்பாறைமாவட்டஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்தப் பொன்விழாவைக் கொண்டாட வேண்டுமென்ற பிரேரணையை முன்வைத்திருந்தார்.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் முகைடீனைத் தலைவராக கொண்ட பொன் விழா ஏற்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டு; நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இன்று 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை கல்ஓயா அபிவிருத்தித் திட்டப் பொன் விழாவின் பிரதான வைபவம் அம்பாறை நகரில் நடைபெறுகின்றது.

துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப் தலைமையில் நடைபெறும் இன்றைய பிரதான நிகழ்வில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க உட்பட பல முக்கிய அமைச்சர்கள் எம். பிக்கள் கலந்து கொள்கின்றனர்.

விழாவை ஒட்டி மத வைபவங்கள், போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதுடன் பொன்விழா சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படுகின்றது.

சேனநாயக்க சமுத்திரம் கட்டப்பட்ட போது இந்த மாவட்டத்தில்ஓர் ஏக்கர் நெற்காணிக்கு ஐம்பது புசல் நெல் விளைச்சலே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இன்று இந்த மாவட்ட விவசாயிகள் ஓர் ஏக்கர் நெற் காணியில் அதன் மூன்று மடங்கு நெல்விளைச்சலைப் பெற்று வருகின்றனர்.

ஒரு லட்சத்து இருபதாயிரம் ஏக்கர் காணியில் இருபோகம் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் இந்த சேனநாயக்கசமுத்திரம் மூலம் குடி தண்ணீர் மின்சார வசதிகளையும் அம்பாறைமாவட்ட மக்கள் பெற்று வருகின்றனர்.

கல்லோயாத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது தற்போதைய அம்பாறை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்துடன் இருந்தது.

அன்று அதாவது 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின்படி இங்கு 130381 தமிழர்கள், 106706 முஸ்லீம்கள், 31174 சிங்களவர்கள் வசித்து வந்தனர். கல்லோயாக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் ஆன பின்னர் 1963ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசனமதிப்பீட்டின்படி இந்த மாவட்டத்தில் 50480 தமிழர்கள், 98270 முஸ்லிம்கள், 62120 சிங்களவர்கள் வசித்தனர்.

சமீபத்திய குடிசன மதிப்பீட்டின்படி இங்குமொத்தச் சனத்தொகை 635332 எனவும், இதில் சிங்களவர்கள் 272980 பேர், முஸ்லிம்கள் 241952 பேர், தமிழர்கள் 118850 பேர் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளதாகத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

இந்தப் புள்ளி விவரங்கள் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட திட்டமிட்ட குடியேற்றத்திற்குச் சான்று பகிரவும் தவறவில்லை.

எப்படியிருப்பினும் கல்லோயா அபிவிருத்தித் திட்டப் பொன்விழா இருவெட்டு முகங்கள் போல் இருவேறு மனநிலைகளைப் புட்டுக் காட்டத்தான் செய்கின்றன.

★ ★ ★

### அம்பாறையில் ஐ. தே .க. பொதுக்கூட்டம்

கடந்த ஐந்து வருடங்களுக்குப் பின்னர் ஐக்கியதேசியக் கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்று அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கின்றது.

ஐ. தே. கட்சியின் அம்பாறை மாவட்ட மலர்ச்சி மாநாடு எனும் பெயரில் இந்த நிகழ்வு இன்று (29-08-1999) ஞாயிறு காலை கல்முனை சந்தாங்கேணி திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளராக இருந்து விலகி அண்மையில் ஐ. தே. கட்சியில் இணைந்து கொண்ட எம். ஏ. முகமட் முஸ்தபா(மையோன் முஸ்தபா) இந்த மலர்ச்சி மாநாட்டின் பிரதான ஏற்பாட்டாளராகத் திகழ்கின்றார்.

முஸ்லிம்களின் முப்பதாயிரம் வாக்குகளைப் பெற்றதன் மூலம் திகாமடுள்ள தேர்தல் மாவட்டத்தில் (அதாவது அம்பாறை மாவட்டத்தில்) மூன்று சிங்களவர்களை எம். பியாகப் பெற்ற ஐ. தே. கட்சி தேர்தல் கால வாக்குறுதிப்படி இந்த மாவட்டத்தில் தேசியப்பட்டியல் மூலம் முஸ்லிம் ஒருவரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்காதுவிட்ட புறக்கணிப்பால் சிறுபான்மை மக்கள் உட்பட ஐ. தே. க. ஆதரவாளர்கள் கூடக் கட்சி மீது அதிருப்தி கொண்ட நிலையிலிருந்தனர்.

இதனால் ஐ. தே. கட்சி அம்பாறை மாவட்டத் தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில் செயலிழந்த நிலையிலிருந்து வந்தது.

இந்த நிலையில் மயோன் முஸ்தபாவின் ஐ. தே. கட்சிப் பிரவேசமும், அதிகாரம் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் மீது கரையோரப் பிரதேச மக்களிடையே ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வும் ஐ தே. கட்சிக்குப் புதிய மலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இன்று நடைபெறும் மலர்ச்சி மாநாடு முன்னாள் அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜீத் தலைமையில் நடைபெறும்.

### ரணில் வருகைக்கு எதிர்ப்பு

இந்த மாநாட்டில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்

[11 ஆம் பக்கம் பார்க்க]

# போலிகள், பொய்மைகளை ஒறுத்து உண்மையை உரைத்து உயர்வோம்!

துதி பாடினால் துன்பம் இல்லை. உண்மையை உரைப்பதால் உபத்திரவமே அதிகம் என வாழும் மனிதர்களிடம், உண்மை கசக்கும் என்பதால் உண்மையை உரைக்காமல் நல்லவராக நடிப்பவர்களுக்கு சாத்தான் துணை நிற்கிறான். இவ்வுலக வாழ்வு அவனுக்கு பொய்மைநிறைந்ததாய், போலியானதாய் கரைந்து போகின்றது. உண்மைகள் ஊமையாகி விடுகிறது.

போலிகளை, பொய்மைகளை வளர்ப்பதை விட உண்மையை உரைப்பதால் துன்பம் வந்தாலும் அதனைத் துணிவுடன் ஏற்று கொள்ளும் மனப்பக்குவம், ஆன்ம பலம் இருப்பவரிடத்தில் போலிகள் பொசுங்கி விடும். பொய்மைகள் மறைந்து விடும் என்பதை மத்தேயு நற்செய்தியில் அழகாக விளக்குகிறார்.

''யேசு தாம் ஜெருசலேமுக்குப் போய் மூப்பர்கள் தலைமைக் குருக்கள், மறை நூல் அறிஞர்கள் ஆகியோரால் பலவாறு துன்பப்படவும் கொலைசெய்யப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடருக்கு அந்த நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார். பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்து கொண்டு ''ஆண்டவரே இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது'' என்றார். ஆனால் யேசு பேதுருவைத் திரும்பிப் பார்த்து, ''என் கண்முன்னே நிற்காதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய்; ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்'' என்றார்.

இப்படித் துணிவுடன் சொல்லும் வல்லமையுள்ளவருக்கு யாரால் எதிர்ப்பு வரும்? தமக்குள்ளேயே எதிரிகள் தோன்றி துன்புறுத்துவதர் என்பதற்கு முன் சொன்ன வாக்கியமே சான்றாகிறது. தமக்கு இவற்றால் ஏற்படும் தீமைகளை எண்ணி உண்மை உரைக்காது ஒதுங்குவதும் ஒத்துழைப்பதும் மனித மனங்களுக்கு சர்வ சாதாரணமாகிவிட்டது.

**ஞாயிறு நற்பிரசாதம்**

இவ்வுலகில் உண்மை உரைப்பதால் வரும் தொல்லைகளை அன்றாடம் காண்கிறோம். உண்மைக்கு சாட்சி பகருபவர் இறைவார்த்தையின்படி அவரவர் செயலுக்கேற்ப பெருமைப்படுத்தப்படுவர். அவர்களுக்கோ வாழ்வு சவாலாக இருக்கும். சிலுவைகள்சுமத்தி வேடிக்கை பார்ப்பதை மனித கூட்டம் அன்றும் செய்தது; இன்றும் செய்கிறது. இதற்காக ஒதுங்குவோரை விட எதிர் கொள்வோருக்கு ஏற்படும் சவால் அதிகம் உண்டு என நற்செய்தி விளக்குகிறது.

''என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தன் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். [illegible] என் பொருட்டு தம்மையே அழித்துக்கொள்கிற எவரும் வாழ்வடைவார். மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக்கொடுப்பார்?'

[மத்.16-21-27]

தன்னையே அர்ப்பணிக்கும் ஒருவருக்கு வாழ்வில் பல சிலுவைகள் சுமத்த தயாராகிக்கொண்டு இருக்கும் மனிதர்கள் மத்தியில் சிலுவைப் பயணத்தில் துன்பங்கள், துயரங்கள், தடைகள் யாவும் உலக ஆசாபாச வலைகளாலே ஈர்த்துக் கொள்ள சாத்தானும் அதன் படைப்புக்களும் தூண்டிக் கொண்டே இருக்கும். நல வாழ்வைக் குழப்பவே செய்யும். அதனை எதிர் கொள்வதில் மனித மனம் கலக்கமடையும் போதுதான் சவால்களும் சபலங்களும் உங்களைச் சந்திக்கின்றன.

**ஜோசப் பாலா**

தன்னலம் துறந்து பிறர் நலம் வளர, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு தந்தையின் பயணத்தில் தளராது பயணிக்கவே அழைப்பு விடப்படுகிறது. துன்பப்படுவோர் மட்டில் சாத்தான்களாய் அல்ல, நல்ல யேசுக்களாய் உதவமுன் வர வேண்டும். நல்ல தலைவன் மூலமே நல்ல தொண்டன் உருவாக முடியும். நல்ல தலைவனான இயேசுவின் வழியில் கால் பதித்த ஒவ்வொருவரது பயணங்களிலும் நல்ல தலைவன் இயேசுவின் வாழ்வும், வழிகாட்டலும் எம் வாழ்வாக உண்மைக்கு சாட்சி பகர வாழ்வின் பயணங்கள் தொடர வேண்டும்.

★

# தகவல் மேடை

இந்தியாவில் செல்ஃபோன் தயாரிப்பு மற்றும் முன்னணியில் உள்ள பிரபல நிறுவனங்களில் நோக்கியாவும் ஒன்று. இந்த நிறுவனம் செவிப்புலன் குறைந்தோர்களுக்காக உருவாக்கியுள்ளதுதான் 6100 மற்றும் 5100 மொடல் செல்ஃபோன்களாகும். இந்த மொடல் செல்ஃபோன்களுடன் எல். பி. எஸ்—1 என்ற கூடுதல் சாதனமும் தரப்படும். செல்ஃபோனின் அடிப்பகுதியில் இணைக்கப்பட்டு அதன் மறுமுனையை உபயோகிப்பாளர் கழுத்துப்பட்டை அருகே பொருத்திக் கொள்ளவேண்டும். செல்ஃபோனில் அழைப்பு வரும்போது அதிலிருந்து வரும் ஒலியை இந்தக் கழுத்துப் பட்டையில் உள்ள மறுமுனையில் பெருமளவு அதிர்வை உண்டாக்கிச் செல்ஃபோன் அழைப்பை உணர்த்தும்.

செவிப்புலன் குறைபாடு உடையவர்கள்அழைப்பை உணரமுடியாத காரணத்தினாலேயே இத்தகைய செல்ஃபோன்களைப் பயன்படுத்துவதில்லை. பதில் தரும் கருவியைப் பயன்படுத்த வேண்டுமென்றாலும் இத்துடன் இணைத்துக்கொள்ள முடியும். நிறுவனத்தின் மிகப்பெரிய பதவி வகித்தாலும் வெளியிடங்களில் பயணம் செய்யும்போது உடனடியாக அலுவலகத்தோடு தொடர்புகொள்ள நினைத்தாலும் அது முடியாது. செவிப்புலன் குறைபாடு உடையவர்களுக்கு இது மிகப் பெருங்குறையாகத்தான் இருந்தது. தற்போது அவர்களும் பயன்பெறும் வகையில் நோக்கியாவின் புதிய தயாரிப்பு அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி

# வழங்கப்பட்டவர்களின் விவரம்

### கோப்பாய்

வி. சிவதாசன்(097245 ஏ), எஸ்.சுந்தரலிங்கம் (097245 பீ), எஸ். கணபதி (104096 ஏ), ஏ. ஐயாத்துரை [104186ஏ], ரி. ஆனந்தராஜா [104186 பி], குகேந்திரபோஸ் (107607 ஏ], பி. பாலசுப்பிரமணியம் [107612 ஏ], பி. தர்மநாதன் ]107612 பி], எஸ். ஸ்ரீகரன்(107623ஏ]

எஸ். ஜனானசக்தி (107623 பீ), என். குலநாதன்(107646 ஏ), ரீ. அஜித்தன் (109631 பீ), பீ. ராககரன் (109675 ஏ), எஸ்.பார்த்திபன்(109685 ஏ), எஸ். பாஸ்கரன்(109687 ஏ), பீ.தனூவன்(109687பீ), பீ. அனுஜன் (109687 சீ), சீ, செல்லம் (109692 ஏ), சீ. சீவரட்ணம் (109692 பீ), கே. துரைராஜா (109737ஏ), எஸ். புவனேஸ்வரி (110026 ஏ), எஸ், சியாமளா (110026 பீ), வி. பத்மாவதி (110027 ஏ),.

வி. தனூஜா (110027 பீ), எம். அப்புத்துரை (110035 ஏ), ஆர்.நந்தகுமாரி(110039 ஏ), பி. ஜெயக்குமாரன் (110042 ஏ), ஏ. சின்னப்பா (110042 பீ), ரி. முருகன் (110050 ஏ), கே. அப்பையா (110053 ஏ), கே. யோகேஸ்வரி (110053 பீ), கே.சுஜித்தா (110053 சீ), கே. சுஜாந்தன் (110053 டி), கே. ஸ்ரீஸ்சந்தராஜா (110054ஏ), எஸ். பவிதாஸ், (110054 பீ), எஸ். சுரேஸ் (110054 சீ), எஸ் விஜயராஜா(110095ஏ),

எஸ். இரத்தினம் (110056 பீ), ஏ. குருசாமி (110057 ஏ), என், நந்தினி (110060 ஏ), என். மதுரை (110060 பீ), எஸ். சின்னத்துரை (110064 ஏ), எஸ். ஜோசேப்பு (110073 ஏ), எம்.யோசேப்பு (110073 பீ), வி. சிவபாலசிங்கம் (110082 ஏ), எஸ். வாகீசன் (110082 பீ), எஸ். அன்ரன் (11086 சீ), என். நந்தினி (110132 ஏ), என். மதுரை (1100132 பீ), கே. தர்மேஸ்வரி(1100138ஏ), கே. சிதம்பரம் (110499 ஏ),

கே யோகராஜா (110499 பி), எஸ். கே. கந்தராஜேஸ்வரா [110779 ஏ], எஸ். வீரசிங்கம் (110797ஏ), எஸ். சிவஞானம் (110797 பி), எஸ். சாந்தகுமார் (11081 ஏ), எஸ். புனிதவதி [11081 பி], எவ், கௌதமன் 111047பி], எவ். கௌசிகா (111047சி), எஸ். நல்லையா (104105பி), எஸ். சுதன் [104105 சி] ஆர். கந்தையா, 109615 ஏ), கே. சிவக்குமார் [109615 பி), எஸ். பரம்சோதி 110708 ஏ), ஜி. சிவானந்தன் (110708 பி). டி. பி. சிவானந்தன் (110708 சீ), டி.பி. சிவானந்தன் (110708 டி), வி. அப்பாத்துரை (110782 ஏ]. ஏ கணபதிப்பிள்ளை (110796 ஏ), சி. அழகரட்ணம் (110796 பி), ஜே. கிருஷ்ணபிள்ளை (109751 ஏ), என். கனகரட்ணம் 110115 ஏ), எம். மதுரை நாயகி (110048 ஏ], ஆர். யோகநாதன் (097052 ஏ), ஜே சுப்ரமணியம்(104034ஏ), ஜே லலிதாம்பிகை (104034 பி], ஜே. பரணீதரன் (104034சி], ஜே. பைரவி [104034 டி), வி. காரானசிங்கம் ]109667 ஏ], எஸ். தனலட்சுமி (109669 ஏ), என். நாகம்மா [109670ஏ].

ஆர். இந்திரேஸ்வரன் (109672ஏ), ரீ. கதிர்காமநாதன்(109694ஏ), ஏ.செல்வநாதன் (109699ஏ) எஸ். பூமணி (109699பீ), எஸ். செல்வரட்ணம் (109734ஏ), எஸ். அருட்குமான் (109734 பீ), எம். கிருஷ்ணர்(109747 ஏ), கே. செல்லம்மா(109747 பீ). கே.ஜெனிவா (109747 சீ), பீ. விஜிதரன் (109747 டீ), டி. ஓ. செல்வமலர் (109765ஏ), ஆர். சாந்தி (109766ஏ), பீ. கனகராஜா (109785ஏ).

கே. முருகர் (109795ஏ), என்.நாகரட்ணம்(110066ஏ), என்.சதானந்தன்(110066பீ), ஐ. எல். ஆஸ்கோ(110067ஏ), ஐ. லீர்(110067பீ). பீ சோமசுந்தரம் (110088ஏ) எஸ். நாகலிங்கம் (110092ஏ), வீ, சரவணமுத்து (110121 ஏ),வீ. துஷ்யந்தி (110121பீ) ரீ.வேலுப்பிள்ளை (110801 ஏ), வீ.பரம்சோதி (110801 பீ), ஏ. நிஷாந்தன் (110899 ஏ), எஸ். அருமயிர்தனம் (110899பீ), எஸ் சிவப்பிரகாசம்(111091ஏ), பீ. தம்பிராஜா (109772ஏ), ஏ கந்தசாமி (110497ஏ). எஸ் இரவீந்திர ஸ்ரீஸ்கந்தா (101109 ஏ),ஆ.இரவீந்திரஸ்ரீஸ்கந்தா (101109பீ).

### சங்கானை

:எஸ் சுப்பிரமணியம் )064926ஏ),எஸ். ஜெயந்தி (094926பீ), எஸ். யனுஷயா (064926சீ), எஸ். தினேஷ் (064926டீ), எஸ். விஜேந் (064926ஈ), எஸ். டிலானி (064926எவ்). எஸ். டிலக்ஷனா(064926ஜி). ஏ. துதிவதனி (105822ஏ), ஆர், குலரட்ணம் (108773ஏ).

வீ.பத்மநாதன் (108792 ஏ),வீ.கனகராஜா (108945 ஏ),வீ ஜானகி (108945பீ), ரீ.அழகரட்ணம்(108973ஏ), கே. ராசம்மா (108973பீ), ஏ.செல்வராஜா(111883ஏ), வீ.ராஜசேகரம் (111917ஏ). ரீ. யோகராணி(111921ஏ), ஜீ. பவானி (111953ஏ),ஜீ, நிதர்ஷா(111953பீ).

ரீ. காசிப்பிள்ளை[111998 ஏ]. கே. கஜேந்தினி [111998 பீ], வீ. செல்வராஜா [112036ஏ], எஸ். கிருஷ்கான் [112036பீ], பீ. புஷ்பராணி [108800ஏ], எம். கந்தையா [108800பீ], ரீ. மகாலிங்கம் [108800சீ], எம். கபலவண்ணை [108800டீ], ஜி. பிரகாஷனா [108800ஈ].

எஸ். சிவகௌரி [112062 ஏ], எம் சிறிகரன் [112146 ஏ], ரீ. நாகேஸ்வரநாதா [111971ஏ], கே. எஸ். பரமராணி [105842ஏ], ஆர். ஈ வி. பீ. ஏ. அன்ரனி ]111968ஏ], எம். பொன்னுசாமி [119909ஏ], எஸ். நடராஜா [111908ஏ], ஆர். ரமேஷ் [108774ஏ], எஸ். ரமேஷ் [108774பீ], ஆர். பீ. டில்கரன் [108774சீ].

ஆர். ரெசிகரன் (108774 டீ), ஜி ரீ.பீ. ஜோதி(108772 ஏ), ஜி. டீ இந்திராணி (108772பீ), ஜி. டீ. சர்வினி (108772சீ), ரீ. அரியகுட்டி (101400ஏ), ஏ. தர்மலிங்கர (101400பீ) ஐ சௌந்தம்ராஜா (108810ஏ), கே. கேதீஸ்வரன் (108988ஏ), கே. மகாலிங்கம் (112794 ஏ), ரீ. சாரங்கன் (112794பீ), ரீ. துஷ்யந்தன் (112794 சீ), ஆர். பிரசலா (111921 பீ), சுரேஸன்தரன் (11217 ஏ), எஸ் மைதிலி (112170 பீ), எஸ். கலைவன் (112171 ஏ), எம். தயாகராஜ் (111817 ஏ), ரீ. ரதி (111817பீ), பீ), ரீ. ஜனனி (111817சீ), தயானி (111817டீ).

எஸ். ஈஸ்வரன் (112002 ஏ), ஈ. அனுஷா (112002 பீ), ஈ. மேரிராணி (111055 ஏ), பீ. நல்லையா (111157 ஏ), கே கணேஸ்வரி (111907 ஏ), எஸ் அருள்மபம் (111926 ஏ), ஏ. ரம்யா (111926 பீ), ஏ. ரகுராம் (111926 சீ), எஸ். முத்துலிங்கம் (112054 ஏ).

ஆர். துரைசந்திரம் (112057 ஏ). எம். துரைசந்திரம் (112957பீ), எல். செல்வகிளி (112180ஏ), கே.விஜேந்திரம் (112849ஏ), ரீ வீரமுந்து (112898 ஏ). பீ. தெய்வேந்திரம் (112898பீ), ஏ. மாதவை (112888 ஏ), ஏ. புஸ்பவதி (112888பீ). பீ சபிதா (112889 ஏ).

எஸ் பாலசிங்கம் (112799 ஏ), பீ. எம். மகால்(112799 பீ), பீ யசோதா(112799சீ), எம் கோணேஸ்வரன் (112133ஏ), என். துரைராஜா (111774ஏ).

[தொடரும்]

## வலி தெற்கு பிரதேசத்தில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு, ஓக, 29

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் இவ்வருடத்துக்கான பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 7 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன,

குழாய்க்கிணறுகள் அமைத்தல், விவசாயவீதிகள் புனரமைப்பு, பாடசாலைகளுக்கான மலசலகூடங்கள் அமைத்தல், விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கல் போன்ற தேவைகளுக்காக இப்பணம் செலவிடப்பட உள்ளது.

பின்வரும் வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ஏழாலைசரஸ்வதிசனசமூக நிலையம். தாவடி காளிகோயிலடி ஆகிய இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்தல் — ரூபா 50 ஆயிரம்.

★ புன்னாலைக் கட்டுவன் ஐயனார் விவசாய வீதி, கந்தரோடை பிள்ளையார்கோயிலில் இருந்து மடத்தடி வரையானவீதி, ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகளுக்கு — ரூபா ஒரு லட்சத்து 50 ஆயிரம்.

★ ஏழாலை தெற்கு அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் மலசலகூடங்கள் அமைத்தல் - ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் — ரூபா 50 ஆயிரம்

இத்துடன், சென்ற ஆண்டு நிறைவேற்றப்படாத கொத்தியாலடி ஒழுங்கைகள் புனரமைப்பு, ஊரெழு வீதியில் குழாய்க் கிணறு அமைத்தல், ஏழாலை இலந்தைகட்டி வைரவர் வீதி புனரமைப்பு, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை, தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மலசலகூடம் அமைத்தல் ஆகியவற்றுக்காக செலவிடப்பட 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கான மாற்றுத்திட்டங்களும், மீதி இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களும் அனுமதிக்காக செயலகத்தினரால் அனுப்பி வைகப்பட உள்ளன

[ஐ-152]

## நேர்முகப் பரீட்சை

நெல்லியடி, ஓக. 28

1996 ஆம் ஆண்டு பிரதேச ரீதியாக தமிழ் மொழி மூல தகுதி காண் ஆசிரிய நியமனப் பரீட்சையில் தோற்றி, வெட்டுப்புள்ளியிலும் பார்க்க அதிக புள்ளியைப் பெற்றும், இதுவரை நியமனம் வழங்கப்படாதவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி வலய கல்விப் பணிமனையில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-109)


கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

காவடி மார்க் கற்பூரம்

நின்று நிலைக்கும் ஜோதிமயம் காவடி கற்பூரம் என்றும் தரும்




கற்பூரம் என்று கேட்காதீர்கள் "காவடி" என்று கேட்டு வாங்குங்கள்

ஏகவிநியோகத்தர்கள்

பிரபா டிரேடிங் கம்பனி

31, கபோஸ் லேன், கொழும்பு 11.

தொலைபேசி: 329426, 422750

[சி/8553]

விற்பனைக்கு உண்டு

பெண்கள். சிறியோருக்குரிய தைத்த ஆடைகள் மொத்த, சில்லறை விற்பனை. வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு.

பிரியா காமன்ற்ஸ்
207, பலாலி வீதி,
கோண்டாவில்.

[68527]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மொரிஸ் ஒக்ஸ்போட் கார், A 30 கார், 404 கார், CM 125 மோட்டார் சைக்கிள், L.M.L ஸ்கூட்டர், யமகா மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. 316/16, ஸ்ரான்லி வீதி, (ஆரிய குளம் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (68510)

50 நாள்கள் நிறைந்த டோமன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ. சிறி, கோண்டாவில் டிப்போ முன்பாக உள்ள கடையில் விசாரிக்கவும். [68544]

நல்லூர் யாழ். மாநகர சபை இந்து விடுதி முன்பாக மூன்று கடைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பி. கோபிநாத், 123, பருத்தித்துறை வீதி. நல்லூர். (68496)

## தவறிவிட்டன

ஏழாலைதெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சந்திரலிங்கம் கனகபூஷணி, சந்திரலிங்கம் சாந்தரூபி, சந்திரலிங்கம் பிரகாஷ் ஆகியோரது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (556171580 V) யாழ். ஆஸ்பத்திரியில் தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து E.S. பேரம்பலம் அன் கோ ஸ்தாபனத்தில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும், (68523)

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த லோகநாதன் தயாளன் என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் (782062468 V, 0907005913), 21 - 08 - 99 அன்று கோண்டாவிலுக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம்றஞ்சனாஸ் புடைவை அகத்தில் ஒப்படைத்து உதவவும். (68522)

25 - 08 - 99 அன்று திருமலையில் இருந்து கே. கே எஸ். வந்த கப்பலில் சு. சவுந்தரியம்மா என்ற பெயர் எழுதப்பட்ட கறுப்புநிற பிரயாணப் பை ஒன்று முக்கிய ஆவணங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S. சத்யா, இல. 58, சன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (68548)

செல்வி ஜெயகவிதா தம்பித்துரை ஆகிய எனது தேசிய (765962153V), விசேட (0902035136), பல்கலைக்கழக (96/R/44) அடையாள அட்டைகள் கச்சேரிக்கும் வேம்படிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயது செய்து யாழ். பல்கலைக்கழகத்தில் அல்லது ஆனந்த குமாரசுவாமி பெண்கள் விடுதியில் ஒப்படைக்கவும். (68545)

## வாடகைக்கு

பம்பலப்பிட்டியில் அறை ஒன்று, பொதுவான தொலைபேசி. பங்கிட்டுப் பாவிக்கக் கூடிய சமையலறை வாடகைக்கு உண்டு. பிரத்தியேக கழிப்பறை, தாயும் ஒன்று அல்லது இரண்டு பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது. மேலதிக விவரங்களுக்கு: க. இரத்தின சிங்கம், இல 73, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம், T.P – 2782. (68551)

## வீடுகள் விற்பனைக்கு

இல. 620. மானிப்பாய் வீதியில் 4½ பரப்பு விஸ்தீரணமுள்ள காணியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: திரு. த கணேசமூர்த்தி, இல. 60, சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (68525)

## தேவை

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற, மனைவியை இழந்த, 60 வயதான ஒருவருக்கு சமையல் வேலை செய்வதற்கு 45 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்ட நல் ஒழுக்கம், நற்குணம், கடமை உணர்வு கொண்ட தேகாரோக்கியம் உள்ள பொறுப்புக்கள் அற்ற ஒரு பெண் தேவை. குழந்தைகள் அற்ற விதவைகள் அல்லது கல்யாணம் ஆகாதவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். விளம்பர இல. 933, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (68502)

## ஆங்கிலம்

திங்கள், புதன் காலை 6– 7 G.C.E. (O/L) வகுப்புக்கும் செவ்வாய், வியாழன் காலை 6–7 G A Q., B,A மற்றும் ஆசிரியர், உத்தியோகத்தர்களுக்கும் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு நாள்களில் வீடுகளுக்குச் சென்று அடிப்படை ஆங்கிலமும் கடந்தகால வினாத்தாள்களும் கற்பிக்கப்படும். K. சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (68476)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி [Broiler] விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (68458)

புறொயிலர் இறைச்சிக் கோழி (1 Kg — 150 ரூபா) அரைக் கோழி உட்பட விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். 54/2. சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு யாழ்ப்பாணம் அல்லது 217/A, ஆஸ்பத்திரி வீதி, (லாவணியாக்கடை அருகில்) யாழ்ப்பாணம். (68542)

இறைச்சிக் கோழி புறொயிலர் மொத்தமாகவும்சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: K. அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதி, T. P. No. 070 – 212354, 070 – 212383 [68430]

## மணமகள் தேவை

அரச உத்தியோகத்தர்கள், வெளிநாட்டில் இருந்து வந்து திருமணம் செய்பவர்கள், வர்த்தகர்கள் ஆகிய சகல தரத்திலும் மணமகன்கள் உண்டு. வராகி திருமண சேவை, பருத்தித்துறை வீதி, 132, 3 ஆம் கட்டை, கல்வியங்காடு. (68538)

---

## கிறிஸ்தவ நாகரிகம்

★ G. A. Q 2000 வகுப்பு ஆரம்பம்
புதன் (01-09-1999) நேரம்: 5 மணி (பழைய நேரம்)
★ A/L 2000, 2001 வகுப்புகளும் நடைபெறுகின்றன.
ஆசிரியர்: திருமதி சுனீத்தா வெனான்சியஸ் B A. (Hons)
54, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.
(68541)

---

## ராஜா கிறீம் ஹவுஸ்
## குலம் கிறீம் ஹவுஸ்

ஆதரவில்
யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை
முன்னிட்டு
மருத்துவ மாணவர் ஒன்றியம்
நடத்தும்

## வினாடி வினா பொது அறிவுப் போட்டி

இடம்:- கைலாசபதி கலை அரங்கு
திகதி:- 1999 – 08 – 29 (ஞாயிறு)
காலம்:- பிற்பகல் 2. 00 மணி

மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக் கழகம்.
(68540)

---

## நூல் வெளியீட்டு விழா

நூல்: திருநல்லைப் பதிற்றுப் பத்து
நூலாசிரியர்: சேந்தன் (பண்டிதர் சி. கார்த்திகேசு)
இடம்: நல்லை ஆதீன மண்டபம்
காலம்: 30–08–99 திங்கட்கிழமை
பிற்பகல் 2.30 மணி (இலங்கை நேரம்)
தலைவர்: உயர்திரு க. சிவராமலிங்கம்
மங்கள விளக்கேற்றல்:
உயர்திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர்)
உயர்திரு. சிவ. மகாலிங்கம்
(உப-அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)
அருளாசி: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
நூல் வெளியீடும் வாழ்த்துரையும்:
செல்வி புஷ்பா செல்வநாயகம் அவர்கள்
முதற் பிரதி பெறுபவர்:
பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர்
திரு. சு. குணநாயகம் அவர்கள்
ஆய்வுரை: திரு. க. சொக்கலிங்கம் M.A (சொக்கன்)
பண்ணிசை: பண்ணிசைமணி
திருஞானசம்பந்தன் அவர்கள்

★ கவிஞர் சேந்தனின் 'திருநல்லைப் பதிற்றுப்பத்து' நூலை வாங்கி நல்லூர் முருகன் திருவருளுக்கு ஆளாகுங்கள்.

சித்திரகலா பதிப்பாளர்
3, செட்டித்தெரு லேன், நல்லூர்.
(சி/8674)

---

இல்லங்களில் நடைபெறும் வைபவங்களில்
சுவையுடன் கூடிய
புரியாணி · கட்லட் · றோல்
பிறைட் றைஸ்
ஆகியவை ஓடர்களுக்கு தயாரித்து வழங்கப்படும்.
ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்து
விருந்தினை விழா ஆக்குங்கள்.

## சாவா பொழுது போக்குக் கழகம்

கண்டி வீதி, சாவகச்சேரி.
(பழைய பொலீஸ் நிலையம் அருகில்)
தொலைபேசி இல. 070 — 212421
(சி/8679)

---

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

எமது தனித்துவம் மிக்க வழமையான
ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது

## A/L DAY CLASS

(A/L 99 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது)

கலை வர்த்தகப் பிரிவுகள்

கணக்கீடு: திரு. பாலவாசன் அளவையியல்: திரு. சுரேஸ்
வணிகக்கல்வி: திரு. பசில் தமிழ்: திரு. லிங்கம்
பொருளியல்: திரு. ராஜேஸ்வரன் இ. நாகரிகம் } திரு சுரேஸ்
வணி. புள்ளி: திரு தவசேகர் இ. சமயம் }

ஆரம்பம்: 30-08-99
(திங்கள்) 8.00 A. M.

- நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

[68536]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்
## நன்றி நவிலலும்



அமரர் சரவணமுத்து சின்னப்பு

அன்னை மடியில் 05 - 04 - 1916 — ஆண்டவன் அடியில் 30 - 07 - 1999

"அன்பின் திருவுருவாய்
அரவணைப்பின் பிறப்பிடமாய்
வையகத்தில் செம்மையுடன்
வாழ வைத்த பிதாவே!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வம் சிவபதம் எய்திய செய்தி கேட்டு, எமது துன்பத்தில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய அன்பர்கள், மலர் மாலைகள், மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும், கண்ணீர்அஞ்சலி செலுத்தியோருக்கும்எம்நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (29-08-1999) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
[சி/8683]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன்

பேராசான்

## சுடர் இ. மகேந்திரன்

அவர்களை

## வாழ்த்துகின்றோம்

எமது அன்பிற்கும் பெரு மதிப்பிற்கும்
பாத்திரமாக விளங்கும்
கொக்குவில் இந்து அன்னையை வளர்த்தெடுத்த
உத்தமபுத்திரர்களில் ஒருவராம்

## சுடர் இ. மகேந்திரம்

அதிபர் அவர்கள்

அறுபதாவது வயதினை ஆண்டுரீதியாகப் பெற்றுக்கொண்டார் என்ற பெருமையில் இம் மணிவிழாவினை நடத்திப் பெருமிதம் கொள்கின்றோம்.

பாரதி வழித்தோன்றல் எம் அதிபர் அவர்கள் அஞ்சா நெஞ்சமும், நெஞ்சிலே நேர்மையும், நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையுமுடைய அதிபர் அவர்கள் எம் கொக்குவில் வாழ் சமூகத்திற்கு அளப்பெரும் சேவையாற்றி மக்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை பெற்றுக்கொண்டவர்.

அவரது புகழ்ச்சுடர் ஓர் அணையாத தீபம். அவர் சேவையினை எவ்வகையில் நோக்கினும் வார்த்தைகளில் வடிக்க முடியாதவை. அறிவுச்சுடராக தமிழிலும், வரலாற்றிலும் தனக்கென தனியிடத்தைப் பெற்று தலைநிமிர்ந்து நிற்பவர்.

கல்வி நிர்வாகத் துறையிலும் தன் ஆற்றல் ஆளுமைகளை பதித்துச் சென்றவர். அவர் ஆற்றிய பணியினால் சமூகம் அவர் செயலை எண்ணி எண்ணி ஏங்குகிறது. ஆசிரிய, மாணவ சமூகமும் கூட அவர் பணிக்கு இன்றும் எதிர்பார்த்து நிற்கிறது.

நமது கொக்குவில் மத்திய சனசமூகத்தினதும் அதன் விளையாட்டுக் கழகத்தினதும் வளர்ச்சியில் ஆரம்ப காலம் தொட்டு அதன் படிமுறை வளர்ச்சிக் காலம் முழுமையாய் பெரும் பங்களிப்புச் செய்தவர். எம் கழகத்தின் ஆலோசகராய் இருந்து எம் இளைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

இவ்வாறானதோர் கல்விமானை, விளையாட்டு வீரனை, சிறந்த நிர்வாகியை, இலக்கியவாதியை எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த சமூக விடுதலையாளனை மணிவிழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து மானிடம் பயனுற சேவையாற்ற வாழ்த்துகிறோம்.

**கொக்குவில்**
**மத்திய சனசமூக நிலையம்**

(68562)



## ஒப்பந்தகாரர் தேவை

யாழ்ப்பாணத்தில் பெருமை வாய்ந்த திட்டம் ஒன்றின் மீள் கட்டுமானப் பணியை [கையேற்க எதிர்பார்க்கின்றோம். அந்த வேலைகளைச் செய்வதற்கு ஒப்பந்த காரர்கள் தேவைப்படுகின்றனர்.

சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**இல. 935, மே/பா உதயன்,**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

[சி/8685]



## தவறிவிட்டது

25-8-99 அன்று காங்கேசன்துறை வந்தடைந்த பயணிகள் கப்பலில் Bag ஒன்று முக்கிய ஆவணங்களுடன் தவறிவிட்டது.

சாந்தன், NO: 1127, பாலைஊற்று, திருகோணமலை என்றமுகவரி ஒட்டப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள்

காவேரி சில்க்ஸ், யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

T. P NO:- 021-2284, 2333 (68565)


## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 1970-06-30 மறைவு 1992-08-29

### பாக்கியதுரை உதயகுமார்

ஏழாண்டு என்ன எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எம் நினைவிலிருந்து நீ விலக மாட்டாய்
மகனே என்று தாய் அழைக்க
அண்ணா என்று நாம் அழைக்க
எங்கோ உன்னை அனுப்பி விட்டார்கள்
என்றோ ஒரு நாள் நீதி கிடைக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
— குடும்பத்தினர்
(68569)

## ஹர்த்தாலினால் ...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தச் சம்பவத்தில் பொது மக்கள் பலர் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதையும் — கண்டித்தே இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது என்று புளொட் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ-5-164)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

டும்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 3 கடற்படையினர் கற்பழிப்புக் குற்றத்துக்காகவும் இராணுவத்தினரில் சிலர் கொலைக் குற்றத்துக்காகவும் ஏனையோர் போதைவஸ்து வைத்திருந்த குற்றத்துக்காகவும் சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தாம் போராட்டத்தை தொடர்ந்து நடந்தப் போவதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

[இ-6-9-51)

## அம்பாறை சிறு......

(எட்டாம் பக்கத்தொடர்)

கிரமசிங்க உட்பட ஐ. தே. கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் அரசியல் உயர்பீடஉறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இந்த மாநாட்டுக்கு வருகை தரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிர்ப்புக் காட்டுவதற்கான முஸ்தீபு நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் கிராமங்கள் எங்கும் ரணிலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சுவரொட்டிகளை ஒட்டவும், கறுப்புக் கொடிகளைக் கட்டி எதிர்ப்புத் தெரிவிக்கவும் முஸ்லிம் அமைப்பு ஒன்று ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதன் பிரதான ஏற்பாடாக ரணில்விக்ரமசிங்க அம்பாறையிலிருந்துகல்முனைக்கு வநகை தரவிருக்கும் பாதையின் மையப் பகுதியான சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் 29 ஆம் திகதி ஒருங்கு சேரவிருக்கும்எதிர்ப்பாளர்களான முஸ்லிம்களும், தமிழர்களும் அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதுடன் கறுப்புப் பட்டிகள் அணிந்து சத்தியாக்கிரகம் செய்யவுள்ளனர்.

அம்பாறை முஸ்லிம் மக்கள் பேரவை எனும் அமைப்பு இதற்கான ஏற்பாடுகளிலீடுபட்டுள்ளது.

ஐ.தே. கட்சி தேர்தல் கால வாக்குறுதிப்படி அம்பாறை [திகாமடுள்ள] மாவட்டத்தில் தேசியப்பட்டியல் மூலம் முஸ்லிம் ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நியமனம் வழங்காமை. —

அம்பாறை மாவட்டத்தில் திட்டமிட்ட குடியேற்றத்திற்கு ஐ. தே. கட்சி ஆதரவளித்து வருதல் —

சிறுபான்மை சமூகங்களுக்குத் திருப்திகரமாக அமையத்தக்க தீர்வு ஒன்றை முன்வைக்காமை —

அம்பாறை மாவட்டத்தில் பௌத்த பிக்குகளைத் தூண்டிவிட்டு முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்திற்கு ஐ.தே.கட்சி தூபமிட்டு வருதல் —

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவின்றி ஆட்சி அமைப்பேன் என ரணில் கூறிய கூற்று —

முதலான காரணங்களுக்காகவே இந்த சாத்வீக ரீதியிலான எதிர்ப்பை முஸ்லிம், தமிழ் மக்களைத் திரட்டி நடத்தவுள்ளதாக மேற்படி அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டுக்கு 50 ஆயிரம் [illegible] பாட்டாளர் மையோன் முஸ்தபா தெரிவித்தார்.

# திருமறைக் கலாமன்ற இறுதி நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக. 29

திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளில் நடைபெறவுள்ளன.

கலைநிகழ்வுகள் 'செம்பியன் செல்வன்' க. ராஜகோபால் தலைமையில் 9-30மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை 'ஈழத்து அண்மைக்கால மரபு வழிப் பிரபந்தங்களில் சமுதாயம்' என்னும் தலைப்பிலும்—

அருட் கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகள் ''உலகமயமாக்கல்'' என்னும் தலைப்பிலும்—

கருத்துரை வழங்குவர்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 5-30 மணிக்கு மன்ற அரங்கில் எம். விக்ரர்ஜெயம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கோ. சி. வேலாயுதம் 'இனிமைத் தமிழ் மொழி எமது'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

'என்று தணியும்' என்னும் தலைப்பில் செல்வி. தாட்சாயணி, ச. முகுந்தன், எம். சாம்பிரதீபன், காரை எம். பி. அருளானந்தம் ஆகியோர் வழங்கும் கவியரங்கும் திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'சிங்க குலச் செங்கோல்' நாட்டுக் கூத்து நாடகமும் தொடர்ந்து இடம்பெறும்.

[க-51]

# ஸி. சுப்பிரமணியத்துக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம்

## யாழ். பல்கலைக்கழகம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஒக. 29

மகாராஷ்டிர முன்னாள் முதல்வரும், முன்னாள் மத்திய அமைச்சரும் தமிழகத்தைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதியுமான ஸி. சுப்பிரமணியத்துக்கு இலக்கிய கலாநிதி பட்டமளித்து கௌரவிப்பது என்று யாழ். பல்கலைக்கழக பேரவையும் மூதவையும் தீர்மானித்துள்ளன.

இந்திய நாடாளுமன்றத்தில் நீண்டகாலம் உறுப்பினராக இருந்த அவர்.

தென்னாசிய மக்களுக்கு ஆற்றிய — ஆற்றி வருகின்ற சேவையைக் கருத்தில் கொண்டு இந்தப் பட்டம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீவிர அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுவிட்ட ஸி. சுப்பிரமணியம் இந்தியாவின் நிதி, இரும்பு — உருக்கு, விவசாய அமைச்சராக நீண்டகாலம் பணியாற்றியவர். நவீன இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர்களுள் ஒருவர் என்று கருதப்படுபவர். இந்திய திட்டக் கமிஷன் தலைவராக இருந்தவர். பாரத ரத்தினா விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். தமிழ் நாட்டின் நிதி, கல்வி அமைச்சராகவும் பணிபுரிந்தவர்.

வெள்ளிவிழாக் காணும் யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்டோபரில் நடைபெறும் போது இந்தப் பட்டமும் ஸி. சுப்பிரமணியத்துக்கு வழங்கப்படும் என யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

எண்பது வயதைத் தாண்டிய ஸி. சுப்பிரமணியம் தமது உடல்நிலை இடங்கொடுத்தால் பட்டத்தை நேரில் ஏற்பதற்காகத் தான் பட்டமளிப்பு விழாவுக்கு வருகைதருவதாகத் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

தமிழகத்தில் பலராலும் மதிக்கப்படும் தகுதியுள்ள ஒரு மூத்த பிரமுகருக்கு இத்தகைய பட்டமளிப்பதன் மூலம் தமிழகத்தில் உயர் கல்விப் பீடங்களிடையே யாழ். பல்கலைக்கழகம் குறித்து மதிப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

(உ)

## இறுதி ஆட்டமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக. 29

டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பும் இன்று காலை 11.30 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது,

(இ-9)

## ரெலோ உறுப்பினர் இராஜினாமா

யாழ்ப்பாணம், ஒக. 29

தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உறுப்பினராக பதவி வகித்த நடராசா கனகரத்தினம் தமது பிரதேச சபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் அனுமதியுடன் தமது சொந்தக் காரணங்களுக்காக தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

(இ-5)

# மக்களுக்கு நன்றி தெரிவித்து புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 29

வவுனியாவில் நேற்று புளொட் அமைப்பு நடத்திய ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவித்து அந்த அமைப்பு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியாவில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் புலிகளால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களின் விளைவாக அரச படையில் உள்ள பொலீஸாரும் கண்மூடித்தனமாக மனித உயிர்கள் என்றுகூட மதியாமல் தாக்குதல்கள் நடத்துவதால் அண்மைக் காலங்களில் பல அப்பாவித் தமிழ் மக்கள் பலியாக நேர்ந்தது.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் நேற்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தோம் இந்தப் போராட்டம் பூரண வெற்றியைப் பெற்றுள்ளது.

மக்கள் சக்தியே மகத்தான சக்தி என்பதை மீண்டும் ஒரு முறை ஆளுவோருக்கும்—புலிகளுக்கும் இந்தப் போராட்டத்தினூடாக மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. V. M. ராஜன், புஸ்பலதா
குழுவினர் பங்குபற்றும்
மாபெரும் நிகழ்ச்சி

**அன்பு வெள்ளம்**

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்,
வட்டுக்கோட்டை.
இன்று (29-8-99) மாலை 3. 30 (புதிய நேரம்)
பிரவேசம் இலவசம்.
நாளை முதல்
U.C. மைதானம், சாவகச்சேரி
(சி/8312)

உ
சிவாய நம
சுன்னாகம் தெற்கு
அருள்மிகு ஸ்ரீ சிவபூதவராயர் ஆலய
**பிரதிஷ்டா**
மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியாரம்பம்:-
27 - 08 - 99 வெள்ளி காலை 6 மணி
மகா கும்பாபிஷேகம்:
30 - 08 - 99 திங்கள்
காலை 6 மணி முதல் 7. 10 வரை
பிரதிஷ்டா பிரதம குரு:
பிரம்மஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள்
(கல்வயல்)
(ஆசிரியர் யா/கைதடி குருசாமி வித்தியாலயம்)
ஆலய குரு:
பிரம்மஸ்ரீ சிவசோமசுந்தர சர்மா
பக்த அடியவர்கள் வருக. திருவருள் பெறுக.

தர்மகர்த்தா சபை
ஸ்ரீ சிவபூதவராயர் ஆலயம்
(சி/8691)

**குளிர்சாதனப்பெட்டிகள்**
**திருத்துதல்**

சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும்
உத்தரவாதத்துடன் திருத்தித்தரப்படும்.
காஸ் ஏற்றுதல் (Gas Filling)
பெயின்ரிங் (Tinger & Painting)
தொடர்பு: P. தேவகுமார் (தேவு)
முளாய் றோட். வட்டுக்கோட்டை.
(68485)

FOR SALE
Computer Systems
Printers And Computer Accessories
Please Contect
Mr. A. SUTHARSHAN
No. 124/2, Palaly Road, Thirunelvely.
(68564)

# கண்ணீர் காணிக்கை

''காலனிடம் சென்ற முகம் காணாது தேடும்''
எமது சக மாணவன்
சி குபரேசசர்மா
அவர்களின் அன்புச் சகோதரனான

## சிவேந்திரசர்மா பராநந்தசர்மா

அவர்கள் இறைபதம் எய்தியதை ஒட்டி ஆத்மா சாந்தியடைய இறைவன் பாதத்தில் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் தாங்கொணாத துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மாணவ மாணவிகள்,
எடிசன் அக்கடமி, 11 ஆம் தரம்.
நல்லூர்.
(சி/8690)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29 - 08 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

எமது புதிய
ஐங்கரன் ஒறிஜினல்
வெளியீடுகள்
கார்த்திக் - ஹிட்ஸ்
★ என்றும்
இனிக்கும்
Vol III
பிரமிட் CD வெளியீடுகள்
விரலுக்கேற்ற
வீக்கம்
விஷ்ணு
புதிய போஸ்டர்களும்
விற்பனைக்குண்டு
**வீடியோ**
**விமல்**
யாழ்ப்பாணம்
(சி/8696)

**புலமைப்பரிசில் 99**
பிரிவு II க்கான
பதி... 
99 ஆ...
புலமை...
பெற்று... க... மா
வர்களின் ... ரம்ப
மாத பிரிவு ... திவு
கள் ஆரம்பமா... ன.
துவரை பதி... செய்து
கொள்ளாத மாணவர்கள்
அனைவரும் உடனடியாகத்
தமது பதிவுகளை மேற்
கொள்ளவும்.
— இயக்குநர்,
IIS, இல. 100,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/8665]

ENGLISH-TAMIL
TYPEWRITING
and
SHORTHAND
CLASS
NEW BATCHES
Start on:
1 st SEPTEMBER
1999
★ Students who Complete these courses successfully will be given the opportunit of obtaining training in the COMPUTER in WORD PROCESSING
For Further Details
Contact:
– DIRECTOR,
IIS,
No. 100,
Clock Tower Road,
Jaffna
(C/8664)

# 'சுடர்' மகேந்திரன் மணிவிழா இன்று கொக்குவில் இந்துவில்

யாழ்ப்பாணம், ஒக. 29

கொக்குவில் இந்துக்கல்லூரி யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர் சுடர் இ. மகேந்திரனின் மணிவிழா இன்று காலை 9. 30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும்.

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் காலை 9 மணிக்கு இடம்பெறும் வழிபாடுகளைத் தொடர்ந்து மணிவிழா நாயகர் குடும்ப சமேதராய் ஆலயத்திலிருந்து கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அழைத்து வரப்படுவார்.

வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை பதில் பீடாதிபதி கே. தேவராஜாவும் வாழ்த்துரையை கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ க. சிவதாஸக்குருக்கள், தென்னிந்திய திருச்சபை பேராயர் அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

வாழ்த்துரைகளைத் தொடர்ந்து நயப்புரையும் மலர் வெளியீடும் விழாநாயகருக்கு அபிமானிகள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தலும் விழா நாயகரின் உரையும் இடம்பெறும். (இ-5)

## இறுதி ஆட்டம்

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூய ஒளி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று ஞாயிறு பிற்பகல் 3. 30 மணி தொடக்கம் யாழ். சென் ஜேம்ஸ் ம. வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறும்.

மூன்றாம், நான்காம் இடங்களை நிர்ணயிப்பதற்கான போட்டியில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து சென் றோக்ஸ் அணியும்—

முதலாம், இரண்டாம் இடங்களுக்கான போட்டியில் பாஷையூர் சென் அன்ரனிஸ் 'ஏ' அணியை எதிர்த்து நாவாந்துறை சென் நீக்கலஸ் அணியும் மோதும். (இ-51)

## கலந்துரையாடல்

யாழ். இராமநாதன் நுண்கலைத்துறை 3 ஆம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அறிமுறை மண்டபதில் நடைபெறும் (இ-ரி)

Obtain
Open University
Exemptions
with
Our Diplomas

1) Diploma in Computer Programming
( One year full time ) — Jaffna Centre
( Including MS Excel 2000, Visual Basic (6.0), & Dbase )
2) Certificate Courses (Morning / Evening)
(3 - 4 Months Duration) — Jaffna Centre
▶ MS Excel 2000 ▶ MS Access 2000
▶ MS Word 2000 ▶ MS Power Point 2000
▶ Pascal ▶ Visual Basic (6.0)
▶ Dbase ▶ C
3) Australian Computer Society Examinations
( Jaffna Centre )
4) Diploma in Draftsmanship ( Civil )
One Year
5) Diploma in Civil Engineering and Quantity Surveying
3 Year Full Time
6) Diploma in Electronics & Telecommunication Engineering
3 Year Full Time
7) Craft Courses
One Year Full Time — ( Vaddukoddai )
▶ Mechanical Craftsmanship Practice
▶ Electrical Wiring & Installation Practice
▶ Automobile
▶ Radio & TV Servicing
Collect application forms at Vaddukoddai or Jaffna Centre
Courses Commence in September, Interview on 06-09-99 at 10-30 a.m.
785, 789, 784 CTB Bus Services are available to Vaddukoddai
JAFFNA COLLEGE
INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI,
464, HOSPITAL ROAD, JAFFNA.
( Opposite O P D )
(C/8669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org